பக்கங்கள்: 14

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 26 ஞாயிற்றுக்கிழமை 12.11.2023 கதிர் 7



அனைத்து 'காலைக்கதிர்' வாசகர்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள் அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

## மண்மேடு சரிந்து இருவர் உயிரிழப்பு ஹாலிஎல தோட்டத்தில் சம்பவம்

பதுளை - ஹாலிஎல ,ரொக்கதென்ன தோட்ட பகுதியில் அமைந்துள்ள வீடுகள் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் இருவர் உயிரிழந்தனர் என்று ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்றுச் சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் பதுளை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் இருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளனர். மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த மேலும் இருவரின் நிலை கவலைக்கிடமாக இல்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# முந்தைய இருளான காலங்களை அற்ற முயல்கின்றது எனது ஆட்சி

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீபாவளிச் செய்தி



தற்போது, தேசம் படிப்படியாக ஒளிமயமான வளர்ச்சியின் பாதையில் இறங்கி, முந்தைய இருளான காலங்களை அகற்ற முயல்கிறது என்று தனது தீபாவளிச் செய்தியில் தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இருளின்மீது ஒளி, அறியாமையின்மீது அறிவு மற்றும் தீமையின் மீது நன்மை ஆகியவற்றின் வெற்றியைக் கொண்டாடும் குறிப்பிடத்தக்க பண்டிகையான தீபாவளியின் இந்த மங்களகரமான தருணத்தில் இலங்கையின் அனைத்து இந்து பக்தர்களுக்கும் வாழ்த்துக்கள்.

இக்கட்டான காலங்களில் நன்மை மற்றும் தீமையின் சமநிலையை மீட்டெடுத்த விஷ்ணு கடவுளால் பாதுகாக்கப்பட்ட வெற்றியின் காவிய புராணக் கதைகளை தீபாவளி பண்டிகை நினைவு கூருகின்றது.

ஒவ்வொரு ஆன்மாவிற்குள்ளும் ஒளியைப் புகுத்தவேண்டும் என்ற பகிரப்பட்ட அபிலாஷையை நிலைநிறுத்தி, பக்தர்கள் தீபங்களை ஏற்றி, மதச் சடங்குகளில் பங்கேற்கின்றனர்.

முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியின் நாட்டின் சமீபத்திய அனுபவத்தைப் பிரதிபலிக்கும் வகையில், எமது ஆட்சி இணையற்ற சவால்களுக்கு ஊடாக இலங்கையை வழிநடத்த முயன்றது. தற்போது, தேசம் படிப்படியாக ஒளிமயமான வளர்ச்சியின் பாதையில் இறங்கி, முந்தைய இருளான காலங்களை அகற்ற முயல்கிறது. ☞2

## இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இளைஞர்களுக்கான ஒரு போதை விருந்துக் கொண்டாட்டம் இடம்பெற்றது என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது, யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள ஒரு ஹோட்டலில் நவம்பர் 4ஆம் திகதி இரவு டிஜே நைட் (DJ night) எனும் பெயரில் இந்தப் போதை விருந்து கொண்டாட்டம் இடம் பெற்றது என்று நவம்பர் 9 இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். நகரில் உள்ள ரிக்கோ ஹோட்டலின் உரிமையாளர் திலகராஜ் ஓர் அறிக்கையை விட்டுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ள முழு விவரம் வருமாறு:

மதிப்பிற்குரிய ஊடக நண்பர்களிற்கு,

04.10.2023 நிகழ்வு தொடர்பாக,

மேற்படி விடயம் தொடர்பில் சில வாரங்களிற்கு முன்னர் ஐதுசன் மற்றும் சாலினி எனும் பெயர்களையுடைய இருவர் எம்மைத் தொடர்பு கொண்டு டிஜே நைட் (DJ Night) நிகழ்வு ஒன்றை செய்வதற்கு எமது ரில்கோ கோட்டலில் இடம் வேண்டும் என்று கேட்டார்கள்.

நிகழ்நிலை கட்டண நுழைவுச்சீட்டு (On-line) நிகழ்வு என்ற காரணத்தால் மேற்படி நிகழ்விற்கான அனுமதியை மாநகரசபையிடம் பெற்று வருமாறு கேட்டுக்கொண்டோம். அதன் பிரகாரம் அந்த அனுமதியை அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். நிகழ்வு நடந்து முடியும் வரை மாநகரசபை பிரதிநிதிகள் மேற்படி நிகழ்வை அவதானித்துக் கொண்டிருந்தார்கள். யாழ்ப்பாண பொலீஸ் தலைமையகத்திற்கு அறிவித்து ஹோட்டலிற்கு ☞2

## சுகதேகம் ஆதுலர்சாலை நேற்று காலையில் திறப்பு

சித்த மருத்துவம் ஊடான சுகதேகம் ஆதுலர்சாலை திறப்பு விழா நேற்று காலை 10.30 மணிக்கு நாவற்குழியில் அமைந்துள்ள நெய்தல் கடற்றகரை நகரில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதமர விருந்தினராக ஆஸ்திரேலியா மெல்பேர்னைச் சேர்ந்தவரான மருத்துவர் நித்தி கனகரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். நீதிவான் மன்ற நீதிவான் ஆ.ஆனந்தராஜா, இந்திய துணைத் தூதரக அதிகாரி மனோஜ் குமார், வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு செயலாளர் சிவகுருநாதன் திருவாகரன், சிவபூமி அறக்கட்டளை நிதிய தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு திரும்ருகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆயுர்வேத முறைப்படியான உடல் பராமரிப்பு மற்றும் சிகிச்சைகளை இந்த ஆதுலர்சாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

## கிரிக்கெட் சபை தலைவர் ஷம்மி சில்வா விளக்கம்

நவம்பர் 21 நடைபெறும் சர்வதேச கிரிக்கெட் சபையின் நிர்வாகசபைக்கூட்டத்தில் தாம் பங்கேற்பார் என்று இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தலைவர் ம்மி சில்வா அறிவித்துள்ளார். இலங்கை கிரிக்கெட் சபையைத் தடை செய்யுமாறு தாம் சர்வதேச கிரிக்கெட் சபைக்குப் பரிந்துரையேதும் செய்யவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைகிரிக்கெட் அணி உலகக் கிண்ணப் போட்டி



யில் படுதோல்வியடைந்து வெளியேறியதைத்தொடர்ந்து கிரிக்கெட்சபையைக்கலைத்த சர்ச்சைகளின் பின்னணியில் நேற்று ☞2

# சிறந்த எதிர்காலத்தையும் சமூகத்தையும் கட்டியெழுப்ப தீபாவளியில் இணைவோம்

### எதிர்க் கட்சித் தலைவர் தீபாவளி வாழ்த்து



நீதிக்காக ஒரு சிறந்த எதிர்காலத்தையும் சமூகத்தையும் கட்டியெழுப்ப, நாம் அனைவரும் உறுதியாக இருக்கவேண்டும் என்ற எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்து பக்தர்களின் இதங்களில் ஒளிமயமானதும் மகிழ்ச்சியும் நிரம்பிய தீபாவளியைக் கொண்டாடும் இலங்கை இந்து சமூத்திற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக். கள். தீபாவளித் திருநாளின் தீபங்கள் நம் இல்லத்தில் உள்ள ☞2

## சர்வதேச கிரிக்கெட் சபையின் தடைக்கெதிராக மேன்முறையீடு அமைச்சர் ரொஷான் தெரிவிப்பு

இலங்கைகிரிக்கெட்டிற்கு விதிக்கப்பட்ட தடைக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் மேன்முறையீடு செய்யவுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை அமைச்சில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் பிரதானியான ஷம்மி சில்வாவினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே தடைகள் விதிக்கும் ☞2

## பொலிஸாருக்கு சீனாவால் 26 மோட்டார் சைக்கிள்கள்

### ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று கையளிப்பு

சீன மக்கள் குடியரசினால் இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு 26 ரனொமொடோ வகை மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 100 டெஸ்க்டொப் கணனிகள் ஆகியன அன்பளிப்புச் செய்யப்பட்டன. அவற்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவின் ஒருங்கிணைப்புடன், ☞2

## மழை தொடரலாம்

நிலவும் மழையுடனான வானிலை எதிர்வரும் சில தினங்களுக்கு மேலும் அதிகரிக்கக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், மத்திய, சப்ரகமுவ, தென் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் குருநாகல் மற் றும் பொலன்னறுவை மாவட்டங்களிலும் 100 மில்லி மீற்றர் வரையான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக் கூடுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெரும்பாலான பகுதிகளில் மாலை வேளையில் மழை பெய்யக்கூடுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடுமென்பதுடன், இதன் போது ☞2

## மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின் தேவிபுரத்தில் துப்புரவுப் பணி தொடக்கம்





முல்லைத்தீவு மாவட்டம், தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தைச் சுத்தப்படுத்தும் பணி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் தொடங்கியது.

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27 தமிழ் மக்களால் அனுஸ்ரிக்கப்படவுள்ளது.

நாட்டுக்காக உயிர் தியாகம் ☞2

## போரில் மாண்ட படையினருக்கு ஜனாதிபதி ரணில் நேற்று அஞ்சலி

முதலாம் உலகப் போரில் இருந்து இன்று வரை தாய் நாட்டின் பாதுகாப்பிற்காக உயிர்த் தியாகம் செய்த படையினரை நினைவுகூர்ந்து கௌரவிக்கும் முகமாக, இலங்கை முன்னாள் பாதுகாப்புப் படையினர் சங்கம், ஆயுதப்படைகளுடன் இணைந்து ஆண்டுதோறும் ஏற்பாடு செய்யும் 'ஆயுதப்படையினர் நினைவு தினம் - 2023' பிரதான வைபவமும் பொப்பி மலர் தின நிகழ்வும் நேற்று பிற்பகல் கொழும்பு விஹார மகாதேவி பூங்காவில் அமைந்துள்ள இராணுவ நினைவுத் தூபியின் முன்பாக முப்படைகளின் தளபதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இடம்பெற்றது.

முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்களில் உயிரிழந்த போர் வீரர்களை நினைவுகூரும் வகையில், கொழும்பு விஹார மகாதேவி பூங்காவில் உள்ள இராணுவ நினைவுத்தூபி நிர்மாணிக்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் கொண்டாடும் நிகழ்வும் இங்கு இடம்பெற்றது. ☞2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளியே 06 பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தார்கள்.

எமது கோட்டலில் 100 - 140 பேர் வரை கொள்ளக்கூடிய மண்டபம் (Hall) வாடகைக்கு விடப்பட்டிருந்தது. எமது நிறுவனம் சார்பில் அனுமதிக்கப்பட்ட மது பானம் மற்றும் சிற்றுண்டிகள் விற்பனை செய்யப்பட்டது. நிகழ்வு முடியும் வரை எந்தவிதமான அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை. நிகழ்வு முடிந்த பின் வந்திருந்தவர்கள் அமைதியாக வெளியேறிச் சென்றனர். உண்மையில் இந்நிகழ்வை ஒருங்கமைத்த இளம் ஒருங்கமைப்பாளர்கள் இந்நிகழ்வை திறம்பட நடாத்தினார்கள். அவர்கள் பாராட்டிற்குரியவர்கள்.

நான் எமது ஈழநாட்டை மிகவும் நேசிக்கின்றேன். பிரித்தானியாவில் இருந்து போர் நடக்கும் போது இங்கு வந்து ரில்கோ ஹோட்டலை கட்டியுள்ளேன். நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்பை வழங்கி உள்ளோம். எமது ஹோட்டலில் பல முக்கிய கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. நாட்டு முக் பிரமுகர்கள் தங்கி இருந்துள்ளார்கள். நாம் இளைஞர்களின் முன்னேற்றத்திற்காக கால்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் மற்றும் துடுப்பாட்டம் போன்ற பல்வேறு விளையாட்டுக்களிற்கும் குறுந்திரைப்பட தயாரிப்பு துறைகளின் முன்னேற்றத்திற்கு அனுசரணையாளராகவும் உறுதுணையாகவும் இருந்துள்ளோம். பாடசாலைகளிற்கும் கிராமங்களிற்கும் உதவிகள் செய்துள்ளோம்.

கடந்த நு2 நாட்களாக சில ஊடகங்களில் உண்மைக்கு புறம்பானதும் முற்றிலும் நடைபெறாத சம்பவங்களையும் திரிபுபடுத்தி எழுதப்பட்டமை மனவேதனைக்குரியவை.

எமது இளைஞர்கள் தான் எமது மண்ணின் எதிர்காலத் தலைவர்கள். அவர்களுக்கும் என்றொரு ஒரு வாழ்க்கை முறை உண்டு. அவர்கள் மேல் குற்றங்களை சுமத்தாமல் எப்போதும் நம்பிக்கை வைக்க வேண்டும். எமது வேறுபாடுகளை மறந்து எமது நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்தை நாமே ஒன்றாக நிர்ணயிக்க வேண்டும் என்பதனை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான் எனது பத்தியில் நகரின் மத்தியில் உள்ள ஒரு ஹோட்டலில் இத்தகைய நிகழ்வு நடந்தது என்று சொல்லியிருந்தேன். அது தனது ஹோட்டலில்தான் நடந்தது என்று திலகராஜ் ஒத்துக்கொண்டிருக்கிறார். நான் சொன்ன மாதிரியே நிகழ்வு நடந்தது என்பதையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். எனது பத்தியிலேயேகூட அந்த நிகழ்வில் ஹோட்டல் சார்பில் அனுமதிக்கப்பட்ட மது வகைகள்தான் வழங்கப்பட்டன என்றே குறிப்பிட்டிருந்தேன். திலகராஜ் தனது அறிக்கையிலும் அதனை ஏற்றுக்கொண்டிருக்கின்றார். நேரம் செல்ல செல்ல நிகழ்வின் உச்சத்தில் அங்கு வந்திருந்தவர்களில் சிலர் போதைப் பொருட்களையும் பயன்படுத்தினார்கள் என்றும் தெரிவித்திருந்தேன்.

திலகராஜ் தனது அறிக்கையில் போதைப் பொருள் பயன்பாடு தொடர்பில் எதுவும் தெரிவிக்கவில்லை என்றாலும் அதனை நேரடியாக மறுக்கவில்லை. அதற்குப் பதிலாக நடைபெறாத சம்பவங்களைத் திரிபு படுத்தி எழுதப்பட்டமை வேதனை என்று மறைமுகமாக மறுக்கிறார். அதைக்கூட விட்டுவிடலாம், ஏனெனில் வந்திருந்தவர்கள் போதைப் பொருள் பயன்படுத்தியமை குறித்து ஹோட்டல்காரர்களுக்கு எதுவுமே தெரியாது என்றுகூட வைத்துக்கொள்ளலாம்.

"எமது இளைஞர்கள் தான் எமது மண்ணின் எதிர்காலத் தலைவர்கள். அவர்களுக்கும் என்றொரு ஒரு வாழ்க்கை முறை உண்டு. அவர்கள் மேல் குற்றங்களை சுமத்தாமல் எப்போதும் நம்பிக்கை வைக்க வேண்டும்" என்று அவர் கூறுவது எமது இளைஞர்கள் மது அருந்திக் கெட்டுப்போவதை நியாயப்படுத்துகின்றது. ஈழநாட்டை மிகவும் நேசிக்கக்கூடிய ஒருவர் கூறக்கூடிய வார்த்தைகளா இவை. மது அருந்திவிட்டு போதை தலைகேறி ஆட்டம்போடும் இளைஞர்கள்தானா எமது மண்ணின் எதிர்காலத் தலைவர்களாவார்கள். அப்படிப்பட்ட ஒரு தலைமையைத்தானா 30 வருடங்களாக உன்னத வழியாட்டியாக இருந்த ஒரு தலைவன் இந்த மண்ணில் விட்டுச் சென்றுள்ளான்?

போதாக்குறைக்கு, அன்றைய நிகழ்வை யாழ். மாநகர சபை ஊழியர்கள் கண்காணித்துக்கொண்டிருந்தார்கள் என்பது ஹோட்டல் நிர்வாகத்திற்கும் தெரியும். அப்படி கண்காணித்தவர்கள் அதில் கலந்து கொண்டவர்களின் பெயர் மற்றும் அடையாள அட்டை எண்களைப் பெற்றிருந்தார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். அப்படிப்பெறப்பட்ட விவரங்களில் 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களும் நிகழ் வில் பங்கேற்றிருந்தார்கள் என்பதை உறுதிப்படுத்தும் அடையாள அட்டை எண்கள் இருக்கின்றன என்பதையும் நாம் அறிந்து கொண்டிருக்கின்றோம். சிறுவர்களுக்கு மது விருந்தில் அதிகாரபூர்வமான அனுமதி எப்படி வழங்கப்பட்டது? ஈழநாட்டில் மட்டுமல்ல உலகில் எந்த நாட்டிலும் சிறுவர்களுக்கு மது விற்பதற்கு அனுமதிக்க முடியுமா?

இளைஞர்களை மது போதைக்கு பழக்கப்படுத்துவதும் சிறுவர்களை மது விருந்துக்கு அனுமதிப்பதும் இளைஞர்கள் மது அருந்துவது அவர்களுக்கான வாழ்க்கை என்று நியாயப்படுத்துவதும் ஈழநாட்டிலும் அதன் பண்பாட்டு கலாசாரத்திலும் அக்கறை கொண்ட ஒருவரால் செய்யப்படும் காரியங்களா? திலராஜினுடைய ஹோட்டல் மது விற்பனை செய்வதற்கான அனுதியைப் பெற்ற ஹோட்டல், அதனால் அங்கு மது வழங்கப்படுகின்றது என்பது சரி, ஆனால் இதுபோன்ற நிகழ்வுகள் மூலம் சிறுவர்களையும் வரவழைத்து மது அருந்துவதை ஊக்கப்படுத்துவது சரியா? அதுதான் ஈழநாட்டுக்குத் தேவையானதா?

இது போன்ற இன்னும் பல விடயங்களை இந்த நிகழ்வு தொடர்பில் சுட்டிக்காட்டிக்கொண்டே போகலாம், இந்த நாட்டின் எதிர்காலத் தலைவர்கள் சிறந்தவர்களாக வளரவேண்டும் என்கிற அக்கறையில், இருப்பினும் இத்தோடு நிறுத்திக்கொள்கின்றேன். போதை, அது மது போதையாக இருந்தாலும் தீங்கானதுதான். அதனை ஊக்குவிக்கும் எந்தவொரு நிகழ்வும் மண்ணில் அக்கறைகொண்டவர்களால் நடத்தப்படுவதாக இருக்கமுடியாது. அது வெறும் வியாபாரம் மட்டுமே.

**- இடிமின்னல் -**
**(idiminnal23gmail.com)**

## முந்தைய இருளான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாம் தீபாவளியைக் கொண்டாடும் இந்தச் சந்தர்ப்பத்தில் தேசம் ஒன்றுபட்டு, நாடு முழுவதும் சுபீட்சத்தின் விளக்குகளை ஏற்றுவது, 2048 ஆம் ஆண்டளவில் இலங் கையை ஒரு வளர்ந்த நாடாக வழிநடத்தும் ஒரு கலங்கரை விளக்கமாக மாறும் என்பது எனது ஆழ்ந்த நம்பிக்கை.

உலகெங்கிலும் உள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் இந்துக்களுக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் அதேவேளையில், இந்த ஒளிப் பண்டிகை செழிப்பையும் நல்வாழ்வையும் கொண்டு வரட்டும் - என்றுள்ளது.

## சிறந்த எதிர்காலத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருளை நீக்கி, வெளிச்சம் கொடுப்பது போல, நம் இதயங்கள் அன்பு, கருணை, ஒற்றுமை, ஆகிய உணர்வுகளால் உண்மையாகப் பிரகாசித்தால் தீபாவளிக் கொண்டாட்டம் மனிதாபிமானமாக இருக்கும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இருளை ஒளியால் வெல்லவேண்டும். தீமையை நன்மையால் வெல்லவேண்டும். விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் புறக்கணிப்பைக் கலையவேண்டும் என்ற நம்பிக்கையை ஒளியின் திருநாளான தீபாவளிக் கொண்டாட்டம் நம் அனைவருக்கும் கொண்டுவரும் நம்பிக்கைச் செய்தியாகும்.

ஒற்றுமை மற்றும் உண்மையின் பண்புகளை புதிய பரிமாணத்திற்கு உயர்த்தி இந்த தீபாவளித் திருநாளில் நாம் பெறும் ஒளியின் மூலம் ஒருவருக்கொருவர் மற்றும் நீதிக்காக ஒரு சிறந்த எதிர்காலத்தையும் சமூகத்தையும் கட்டியெழுப்ப, நாம் அனைவரும் உறுதியாக இருக்கவேண்டும் என்பது எனது கருத்தாகும்.

மோசடி, ஊழல், திருட்டு ஆகியவற்றை நிராகரித்து உண்மைக்காவும் நன்மைக்காகவும் நின்று, மக்களின் எதிர்காலத்திற்காக நேர்மையாகவும் உண்மையாகவும் மனிதப் பண்புடனும் பரிபூரண இதய சுத்தியுடனும் உழைக்கும் தலைவர்களிடமிருந்து நம் நாட்டின் அரசியலை ஒளிரச் செய்திவதற்கு இந்தத் தீபாவளியின் திங்கள் காரணமாக அமையும் என எதிர் பார்க்கின்றேன்.

நீங்கள் அனைவரும் வளமான எதிர் காலத்தை நோக்கி அடியெடுத்து வைப்பதற்கான சரியான பாதைக்கான வழிகாட்டியாக இந்தத் தீபாவளியின் தீபகங்கள் விளங்கட்டும் - என்றுள்ளது.

## பொலிஸாருக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ன் ஹொங்விடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பணிகளை இலகுவாக்க இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆவணங்கள், இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ன் ஹொங்வினால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டன. சீன தூதரக அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழு மற்றும் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (நிர்வாகம்) நிலந்த ஜயவர்தன உட்பட பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## தடைக்கெதிராக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீர்மானம் நேற்று (நேற்று முன்தினம்) நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டதாக கிரிக்கின்போ மற்றும் வியோன் உள்ளிட்ட பொறுப்பான ஊடகங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

இந்த தகவல்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு கிடைத்ததைப் போன்றே எனக்கும் கிடைத்துள்ளன. சினமன் ஹோட்டலின் பிரத்தியேக அறையொன்றில் இலங்கை கிரிக்கெட் சபை மீதான தடையைக் கொண்டாடும் வகையில் ஆரவாரத்துடன் விருந்து பசாரம் நடத்தப்பட்டுள்ளது.

இதன் மூலமாக இலங்கையில் எவ்வாறான கிரிக்கெட் நிறுவனமாகச் செயற்பட்டுள்ளது என்பதை பொதுமக்களால் உணர்ந்து கொள்ள முடிகின்றதா? தனது நாட்டை தானே தடைசெய்யுமாறு கோரும் ஊழல் மிக்க, மிலேச்சத்தனமான நபர்களே இலங்கையில் உள்ளனர்.

இலங்கை அன்னையைக் காட்டிக் கொடுக்கும் அளவிற்கு இவர்களுக்கு எங்கிருந்து அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பதை என்னால் யூகித்துக்கொள்ள முடியவில்லை.

இவ்வாறான நிலையில் இலங்கை கிரிக்கெட் சபையின் கலைப்பு சம்பந்தமான விடயங்களை நாளை திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் முன்வைக்கவுள்ளோம்.

அதற்கிடையில் ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் எம் மீதான தடைகளை எதற்காக விதித்தீர்கள் என்று நாம் சர்வதேச கிரிக்கெட் சபையிடத்திலும் வினவுள்ளோம். அதற்கான கடிதத்தினை இன்று (நேற்று) அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தடை உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ள நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் பிணக்குகளைத் தீர்க்கும் குழுவானது எம்மிடத்தில் காரணங்களை வினவவுள்ளது. அதற்கு நாம் பதிலளிப்போம்.

நாம் ஊழல் மோசடிகள் தொடர்பில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதன் பின்னர் எடுத்துள்ள தீர்மானங்களில் என்ன தவறுகள் உள்ளன என்பது தொடர்பில் வினாக்களைத் தொடுப்போம்.

அத்துடன் சர்வதேச கிரிக்கெட் சபையிடத்தில் மேன்முறையீட்டைச் செய்யவுள்ளதோடு, விளையாட்டுத் தொடர்பான பிரச்சினைகளை நிவர்த்திக்கும் நீதிமன்றத்தினையும் நாம் நாடவுள்ளோம்.

அதேநேரம், நான், ஊழல், மோசடிகளை கிரிக்கெட்டிலிருந்து துடைத்தெறிவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளேன். இந்தச் செயற்பாட்டிற்கு பல தடைகள் ஏற்படுத்தப்படும்.

தற்போது, இதுவொரு தொலைக்காட்சி நாடகம் போன்று அரங்கேற்றப்படுகின்றது. எனது செயற்பாடுகளை காணொளிகளாக பதிவு செய்கின்றார்கள். என்னால் தான் கிரிக்கெட் நிறுவனம் தடை செய்யப்பட்டது என்ற கருத்தினை பிரசாரம் செய்வதற்கு முயற்சிக்கின்றார்கள். அதற்கு நான் இடமளிக்கப்போவதில்லை.

அவ்வாறாக இருந்தால் அவர்கள் என்னை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பினால், ஊழல், மோசடிகளுக்கு எதிராக செயற்பட்ட அமைச்சரை வீட்டுக்கு அனுப்பிய நாடு என்ற பெயரை அது பெற்றுக்கொள்ளும் என்றார்.

## மழை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்படக்கூடிய அனர்த்தங்களை தவிர்த்துக் கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, 18 இற்கும் அதிகமான நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளமையால், ஆற்றுநீர் உள்ளிட்டவற்றின் வேகம் அதிகமாகியுள்ளதாக அனர்த்தமுகாமை மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், ஆற்றுப்பகுதிகளுக்கு அருகில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பாகவும், அவதானத்துடனும் இருக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கிரிக்கெட் சபை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்தியாளர்களைச் சந்தித் ம்மின இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அத்துடன், இலங்கை கிரிக்கெட் சபை மீது சர்வதேச கிரிக்கெட் சபை விதித்த தடை முடிவானது இன்றோ நேற்றோ எடுக்கப்பட்டதல்ல. இலங்கை கிரிக்கெட் மீது அரசியல் தலையீடுகள் அதிகமாக காணப்படுவதாக இலங்கைக்கு வந்திருந்த இம்ரான் கவாஜா ஜனாதிபதியிடத்திலேயே நேரில் கூறியிருந்தார்.

கவாஜா மே மாதம் அவர் வருகை தந்திருந்த நிலையில் நான் ஜுன் மாதத்தில் நடைபெற்ற சர்வதேச கிரிக்கெட் சபைக் கூட்டத்தில் பங்கேற்றபோது, அந்தக் கூட்டத்திலும் இலங்கைக் கிரிக்கெட்டில் அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது - என்றார்.

இதேவேளை, சர்வதேச கிரிக்கெட் சபையின் கூட்டம் அஹமதாபாத்தில் நடைபெறவுள்ள நிலையில் அவருக்கு கண்காணிப்பு மட்டத்தில் கலந்துகொள்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேநேரம் இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் மீதான இடைநீக்கத்தின் விதிமுறைகள் இதுவரை அறிவிக்கப்படவில்லை என்பதுடன், எதிர்வரும் நிர்வாகக்குழு கூட்டத்தில் அது குறித்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, இலங்கை கிரிக்கெட் சபையின் மீது உச்சபட்ச நடவடிக்கையை அல்லது இடைநிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தால் சர்வதேச கிரிக்கெட் சபையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டதாக கிரிக்கின்போ மற்றும் வியோன் இணையதளங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

முன்னதாக, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நடவடிக்கைகள் சுயாதீனமாகவும் அரசியல் தலையீடுகள் இன்றியும் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டியது அவசியம் என்று சர்வதேச கிரிக்கெட் சபை விடுத்துள்ள தடை அறிவிப்பு தொடர்பான ஊடக அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு அம்பிட்டிய தேரர் சட்டத்திற்கு அப்பாற்பட்டவரா?

## முஷாரப் எம்பி நாடாளுமன்றில் கேள்வி



அம்பிட்டிய தேரர் மிக மோசமான இனவாதக் கருத்துக்களை முன்வைத்த போதும் இதுவரை அவர் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பது நாடாளுமன்றம் பௌத்த தேரர்களுக்கு அடிபணிவதைக் குறிப்பதாக இருக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினருமான. எஸ். எம். எம். முாரப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பேசும் போது வடகிழக்கு மாகாணங்களில் நடக்கின்ற சில இனவாத செயல்பாடுகள் தொடர்பில் தன்னுடைய கண்டனத்தை தெரிவித்தார். அவரினுடைய இந்தக் கருத்தினை நான் ஆமோதிக்கின்றேன். வடக்கு கிழக்கை பொறுத்த அளவிலே சில பௌத்த துறவிகளினுடைய செயல்கள் மிகவும் கண்டிக்கத்தக்கதாக இருக்கின்றன.

மட்டக்களப்பை சேர்ந்த ஒரு தேரர் அண்மையில் பேசுகிற போது தமிழ் மக்களை அவர்கள் எவராக இருந்தாலும் சரி தமிழ் மக்களை கண்டம் துண்டமாக வெட்டுவேன் என்று எச்சரித்தார். அவரது காணொலி எல்லா இடங்களிலும் பரவி இருந்தது. அவ்வாறு கண்டம் துண்டமாக வெட்டுவேன் என்று எச்சரிக்கை விடுத்துள்ள பிக்கு இன்றுவரை கைது செய்யப்படவில்லை. அவருக்கு எதிரான எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் இந்த நாட்டிலே ஒரு சட்ட ஆட்சி நடக்கிறதா என்ற ஒரு கேள்வி எழுகிறது.

பொருளாதார கெடுபிடிக்குள் சிக்கிச் சின்னாபின்னமாகிய இந்த நாடு இன்று ஓரளவுக்கு மூச்சுவிடக்கூடிய இந்தச் சூழலிலே மீண்டும் இனவாத ரீதியிலான செயற்பாடுகளை உருவாக்கும் வண்ணமான சிலர் வடக்கு கிழக்கிலே செயற்பட்டு வருகின்றனர். எனவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை சீரமைத்த ஜனாதிபதியை நான் பாராட்டுகிற அதேவேளையிலே இந்த இனவாத ரீதியான போக்குடையவர்களை அடக்கி ஆள்வதற்கு சட்டம் பயன்படுத்த வேண்டும் என்பதை சட்டத்தை உருவாக்கிய இந்த உயரிய சபையிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அம்பிட்டிய தேரர் சாதாரணமாகப் பேசுகிற முறைமையை பார்த்தாலே அவர் எத்தகையவர் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இன்று மட்டக்களப்பில் அவர் பல்வேறு கருத்துக்களை வெளியிடுகிறார், உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடிய கருத்துக்களை வெளியிடுகிறார், அதனை யாரும் இங்கு ஏற்றுக்கொள்ள முடியாது.

இதற்கு ஒப்பவே அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேசத்தில்கூட ஒரு பௌத்த துறவி இருக்கிறார். எங்களுடைய பிரதேசத்தை மையப்படுத்தி பல்வேறு விடயங்களின் ஊடாக முஸ்லிம் மக்களை அப்புறப்படுத்த முயற்சி செய்தார். அதனை நாம் தடுத்து நிறுத்தி இருக்கிறோம். இறைவனுக்கு முதலில் நன்றி. அரசாங்கமும் அதற்கு தேவையான சில நியாயங்களை புரிந்து கொள்வதற்கு உதவி செய்தது.

அதே சமயத்தில் அவர் தனக்கென ஒரு இடத்தை பிடித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக கண்ட இடங்களெல்லாம் சென்று அது தங்களுக்கு உரியது, தொல்லியல் திணைக்களத்துக்கு உரியது, அல்லது வனத் திணைக்களத்திற்கு உரியது, இந்த வனாந்தரத்தை மக்கள் அழிக்கின்றார் என்பதாக பொய்யான கருத்துகளையும் கட்டுக்கதைகளையும் பரப்புகின்றார். தேசிய ஊடகங்களில் இவ்வாறான செய்திகளை நாம் பரப்புகின்றதை நாம் பார்க்கின்றோம். ஒரு செய்தியினுடைய உண்மைத்தன்மை பற்றி ஆராயாமலேயே அந்தச் செய்தியை வெளியிடுகிறார்கள்.

அம்பிட்டிய தேரரின் பேச்சிற்கு பின்பு இதுவரையும் அவருக்கு தண்டனை கொடுக்கப்படவில்லை என்றால் இந்த நாட்டிலே நீதி மன்றத்துக்கு மேலாக, சட்டம் அரசலமைப்புக்கும் மேலாக பௌத்த பிக்குகள் இருக்கிறார்களா என்பதை இந்த சட்ட சபையில் இருப்பவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். யாராக இருந்தாலும் குற்றம் புரிந்தால் அது குற்றம்தான். குற்றத்துக்கான தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்றார்.

## போரில் மாண்ட ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிகழ்வு நடைபெறும் இடத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை, இலங்கை முன்னாள் பாதுகாப்பு படையினர் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் உபுல் பெரேரா (ஓய்வு பெற்ற) வரவேற்றார்.

சர்வமத அனுஷ்டானங்களின் பின்னர் ஆயுதப்படையினர் நினைவுதின வைபவம் ஆரம்பமானது.

உயிரிழந்த படையினரின் நினைவாக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், ஜனாதிபதி உட்பட அதிதிகள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் சங்கப் பிரதிநிதிகள் இராணுவ நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இராணுவ நினைவுத் தூபியின் விசேட நூற்றாண்டு நினைவுப் பலகையை ஜனாதிபதி திறந்து வைத்தார். இராணுவ நினைவுத் தூபியின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்பட்ட விசேட நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் அட்டையை வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார மற்றும் தபால் மா அதிபர் ருவன் சத்குமார ஆகியோர் ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தனர்.

கடற்படை சிறு அதிகாரி (ஓய்வு பெற்ற) கே. நிஹால் தொகுத்த இலங்கையிலுள்ள போர் நினைவிடங்கள் (நிழிஷ துளதுலி- ஷஷ்ழியிவி ஷ்ஜ நீஷஷ் யிழிஜவழி) என்ற நூலை முன்னாள் படைவீரர்கள் சங்கத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் உபுல் பெரேரா இதன்போது ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட முப்படைகளின் அதிகாரிகளுடன் குழு புகைப்படத்திலும் ஜனாதிபதி இணைந்துகொண்டார். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மேல் மாகாண ஆளுநர் மார்ல் ஒஃப் த எயார் ஃபோர்ஸ் ரொஷான் குணதிலக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லுதினன் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படையின் தலைமை அதிகாரி ரியர் அட்மிரல் ஜயந்த குலரத்ன, விமானப்படையின் தலைமை அதிகாரி எயார் வைஸ் மார்ல் சம்பத் விக்ரமரத்ன, அட்மிரல் ஒப் த பிலீட் வசந்த கரண்ணாகொட உள்ளிட்ட இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் இலங்கை முன்னாள் படையினர் சங்கத்தின் பொதுச் செயலாளர் லுதினன் கேணல் அஜித் சியம்பலாபிட்டிய, இலங்கை முன்னாள் படைவீரர்கள் சங்க அறக்கட்டளை சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் உபாலி பண்டாரதிலக உட்பட அதன் அங்கத்தவர்களும், பிரிகேடியர் டென்சில் கொப்பேகடுவவின் மனைவி திருமதி லிலீ கொப்பேகடுவ உட்பட உயிரிழந்த முப்படை வீரர்களின் உறவினர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## மாவீரர்களுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்த தமது உறவுகளை நினைந்து வருடம்தோறும் கார்த்திகை 27 மாவீரர் நாள் நிகழ்வுகள் தமிழர்கள் வாழும் தேசமெங்கும் அனுஸ்ரிக்கப்படுவது வழமை. அந்தவகையில் இவ்வாண்டும் மாவீரர் நாள் நிகழ்வுகள் மேற்கொள்ள தமிழர் தாயகப் பகுதிகள் மாத்திரமின்றி தமிழ் மக்கள் வாழும் தேசமெங்கும் தயாராகி வருகிறது

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் தேவிபுரம் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினரால் நேற்றுத் தொடங்கப்பட்டது.

மாவீரர்களுக்கு ஈகச்சுடர் ஏற்றி, அக வணக்கம் செலுத்தி மலர்வணக்கம் இடம் பெற்றதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன

இவ்வாண்டும் கார்த்திகை 27 மாவீரர் நாள் உணர்வு பூர்வமாக இடம்பெறும் எனவும் அனைத்து மாவீரர் பெற்றோர் உறவுகளையும் கலந்துகொள்ளுமாறும் முன்னாயத்த பணிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறும் பணிக்குழுவினர் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# கிரிக்கெட் சபையிடம் நிதிகளை பெற்ற 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார்?

## பெயர் விவரத்தை பகிரங்கப்படுத்து என்கிறார் தயாசிறி



கிரிக்கெட் சபையின் இடைக்கால குழு நியமனம் தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இவ்வாறான பின்னணியில் தான் நீதிமன்றம் இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிரிக்கெட் சபையிடம் நிதி பெற்றதாக அமைச்சர் குறிப்பிட்டார். ஆகவே, அந்த 15 உறுப்பினர்கள் யார் என்பதையும் அவர் பகிரங்கப்படுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப் பொறுப்பு சட்டமூலம் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -கிரிக்கெட் சபையின் தலைவர் சம்மி சில்வா மக்கள் விடுதலை முன்னணிக்கு நிதி வழங்கியதாக ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான பிரசன்ன ரணதுங்க வியாழக்கிழமை குறிப்பிட்டார்.

ஆனால் வெள்ளிக்கிழமை அந்தக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்த முடியாது என்று குறிப்பிடுகிறார்.

கிரிக்கெட் சபையின் வைப்பில் இருந்து 2 மில்லியன் டொலரை மீளப்பெறுவதற்கு கிரிக்கெட் சபையின் மோசடியாளர்கள் முயற்சிக்கின்றனர் என விளையாட்டுத்துறை அமைச்சர் றொஷான் ரணசிங்க குறிப்பிட்டார். ஒப்பந்தகாரர்களுக்கு நிலுவை தொகை செலுத்துவதற்கான இந்தத் தொகையை மீளப்பெற நடவடிக்கை எடுத்ததாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் அறிக்கை வெளியிட்டுள்ளது.

கிரிக்கெட் சபை தொடர்பில் தொடர்ந்து பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. ஆனால் உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை.இது முற்றிலும் தவறானது.

ஸ்ரீ லங்கா கிரிக்கெட் சபையிடமிருந்து 15 நாடாளு மன்ற உறுப்பினர்கள் நிதி பெற்றதாக அமைச்சர் றொஷான் ரணசிங்க குறிப்பிட்டார்.யார் அந்த 15 பேர் என்பதை அவர் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க வேண்டும். இந்தகருத்துஒட்டுமொத்தநாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தாக்கம் செலுத்தும்.

கிரிக்கெட் சபையின் வீழ்ச்சிக்கு முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர்கள் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிடுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது.நான் விளையாட்டுத்துறை அமைச்சராக பதவி வகித்த போது பல முக்கிய தீர்மானங்களை முரண்பாடற்ற வகையில் எடுத்தேன்.கிரிக்கெட் சபையுடன் பேச்சில் ஈடுபட்டு சுமுகமான தீர்மானங்களை எடுத்தேன்.

சம்மி சில்வா தலைமையிலான நிறைவேற்று சபையை கலைத்து இடைக்கால குழுவை விளையாட்டுத்துறை அமைச்சர் நியமித்தார்.அதுதற்போதுபாரிய நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளது.இந்த இடைக்கால குழு நியமனம் தொடர்பில் அமைச்சரால் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பல குறைபாடுகள் காணப் படுகின்றன.

இவ்வாறானபின்னணியில் தான்நீதிமன்றம்இடைக்காலத் தடையுத்தரவுபிறப்பித்துள்ளது.

நாடாளுமன்றநிலையியல் கட்டளையில்83ஆவதுபிரிவில் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள விடயம்,நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற கட்டமைப்பை விமர்சிக்கும் வகையில் கருத்து தெரிவிப்பது தவிர்க்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் கிரிக்கெட் தொடர்பான விவாதத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் மீது பாரதூரமான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இந்த குற்றச்சாட்டு தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கை வெளியிட்டுள்ளது. முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.நீதியரசர்குற்றமிழைத்திருந்தால் அவருக்கு தண்டனை வழங்க வேண்டும்.இல்லாவிடின் குற்றச்சாட்டை முன்வைத்த அமைச்சருக்கு தண்டனை வழங்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே இவ்விடயம் எதிர்மறையான முரண்பாட்டை தோற்றுவித்துள்ளது. கிரிக்கெட் சபையை பலப்படுத்துவதாக குறிப்பிட்டுக் கொண்டு பலவீனப்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுப்பதை அமைச்சர் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.கிரிக்கெட் சபையுடன் கலந்துரையாடி ஒருதீர்மானத்தை எடுக்க வேண்டும். - என்றார். (05)

# கிரிக்கட் அணி தோல்வியின் பின்னணியில் சதித்திட்டம்

## நிரூபனமானால் நடவடிக்கை என்கிறார் ஹோஹறண திஸாநாயக்க

இலங்கை கிரிக்கட் அணியின் படுதோல்விகளின் பின்னணியில் ஏதேனும் சதித்திட்டம் காணப்பட்டால், அதனுடன் தொடர்புடைய சதிகாரர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கமைய கிரிக்கட்சி தெரிவுக்குழுவின் தலைவர் பிரபோத்ய விக்கிரமசிங்க தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் அரசாங்கம் கரிசனை கொண்டுள்ளதாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ஹோஹறண திஸாநாயக்க தெரிவித்தார்.

மேலும் கிரிக்கட்சபை விவகாரத்தில் பிரபல இந்திய அரசியல்வாதியொருவரின் தலையீடு காணப்படுவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிடுகின்றமை அவர் அரங்கேற்றும் அரசியல் நாடகமாகும்.

கிரிக்கட் விளையாட்டை காட்டிக்கொடுத்தேனும் அரசாங்கத்தில் குழப்பத்தை ஏற்படுத்துவதே அவரது நோக்கமாகும் என்றும் இராஜாங்க அமைச்சர் ஹோஹறண திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் இலங்கை அணி எதிர்கொண்ட மிக மோசமான தோல்விகளுக்கான காரணம் வெளியே இருந்த சதித்திட்டமே என கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் பிரமோத்யவிக்ரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியுடன் வெள்ளிக்கிழமை நாடு திரும்பியபோது, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பான அனைத்து தகவல்களும் இன்னும் ஓரிரு நாள்களில் வெளியிடப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வினவிய போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இலங்கை அணியின் தோல்வியின் பின்னணியில் எவரும் அறியாத உள்ளகக் காரணிகளை அவர் இனங்கண்டிருக்கக் கூடும்.

எனவே அவரது கூற்றின் படி இதற்கு எவரேனும் பொறுப்பு கூற வேண்டுமெனில், அவர்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

அதற்கமைய தெரிவுக்குழுவின் தலைவர் பிரமோத்ய விக்கிரமசிங்கவால் உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டதன் பின்னரே எம்மால் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

அதற்கமைய பிழைகளை திருத்திக் கொண்டு எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியும். எனவே அவ்வாறு ஏதேனும் காரணிகள் காணப்பட்டால் அவை முன்வைக்கப்படுமானால் அது சிறந்ததாகும்.

கிரிக்கட் போட்டிகளில் தோல்வியடைந்தது போதும். புதன்கிழமை போட்டியில் கடைசி நிமிடத்திலாவது இலங்கை வென்று விடும் என்ற எதிர்பார்ப்புடனேயே முழு நாட்டு மக்களும் எதிர்பார்த்திருந்தனர்.

அந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. எனவே இனியாவது இவ்வாறான தோல்விகள் ஏற்படாமல் தவிர்க்க வேண்டும்.

**கேள்வி :** இலங்கை கிரிக்கட் மீது சர்வதேச தடை விதிப்பது தொடர்பில் சினமன் ஹோட்டலில் பேச்சு இடம்பெற்றதாகவும், அதன் பின்னணியில் 'ா' என்ற ஒருவர் காணப்படுகிறார் எனவும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இது தொடர்பில் அமைச்சு ஆராய்ந்ததா? இதன் உண்மைத் தன்மை என்ன?

**பதில் :** உண்மையில் இது அரசியல் தலையீடொன்றாகும். இதனைஅடிப்படையாகக்கொண்டு எதிர்க்கட்சி தலைவர் அரசியல் செய்கின்றார்.

நேர்மையாக இந்த விடயத்தைக் கையாள்வதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுத்துள்ள நிலையில், அதற்குஅப்பால்சென்று அரசாங்கத்தைக் குழப்புவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே எதிர்க்கட்சித் தலைவரின் தேவையாகும்.

அவர் முன்னால் ஜனாதிபதியின் மகனாவார். அவர் என்ன விளையாட்டுகளுடன் தொடர்புடையவர் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் கிரிக்கட் விளையாட்டைக் காட்டிக் கொடுத்தேனும் ஆட்சியைக் கைப்பற்றுவதே அவரது இலக்காகவுள்ளது. - என்றார்.

(05)




# நிலத்தினில் தீபாவளி நிறைவினைத் தரட்டும்!

உல்லாசம் பொங்க உள்ளம் மகிழ்ந்திட
உறவுகள் கூட உணர்ச்சி பொங்கிட
ஒளியில் இல்லம் மூழ்கிச் சிறந்திட
வருகின்ற நாளே மனமுறை தீபாவளி

பட்டாசு மத்தாப்பு கைகளை நிறைக்க
பாங்குடன் சிறியவர் பெரியவர் மகிழ
வெடித்திடும் போதும் விரிந்திடும் போதும்
வேதனை துன்பம் காணாமல் போகுமே

சமயமும் சேரும் சமூகமும் சேரும்
சாத்திரம் சடங்கு சேர்ந்துமே நிற்கும்
இல்லமும் இணையும் இன்பமும் இணையும்
நல்லதை உணர்த்திடும் நம்தீபா வளியும்

மணமக்கள் வாழ்வில் மகிழ்வினை ஊட்ட
மாமனார் வீட்டை நாடியே நிற்க
விருந்துகள் நடக்க வெகுமதி கிடைக்க
நலந்திகள் தீபாவளி நல்வழி சமைக்கும்

புத்துடை மனதில் புத்துணர் வூட்டும்
புதுப் பொலிவுடனே யாவரும் திகழ்வார்
தித்திக்க பண்டம் வீடெலாம் மணக்கும்
தித்திக்கும் உணர்வை ஊட்டுமே தீபாவளி

இசையுடன் விழாக்கள் எங்குமே நடக்கும்
இயற்றமிழ் அரங்கம் சிறப்பாய் இருக்கும்
ஆடலும் பாடலும் அரு விருந்தாகும்
அனைவரும் இணைந்து ஆனந்தம் அடைவார்

ஆலயம் நோக்கி அனைவரும் ஏகுவார்
ஆண்டவ னிடத்து வேண்டுவார் பலவரம்
பரவசப் பக்தியில் மூழ்குவார் பலருமே
பண்ணிசை பாடியே பரவுவார் பணிவுடன்

சிறியவர் ஓட பெரியவர் தடுக்க
விழுந்தவர் எழும்ப இளசுகள் சிரிக்க
குதூகலம் என்பது விதம் விதமாக
தீபா வளியின் அங்கமாய் மிளிரும்

இருப்பவர் இனிப்பை நிறையவே சுவைப்பார்
இல்லார் இனிப்பை எண்ணியே ஏங்குவார்
கொடுத்துமே மகிழ்வோம் கொண்டாட்டம் சிறக்கும்
நிலத்தினில் தீபாவளி நிறைவினைத் தரட்டும்

நிம்மதி மனத்தில் நிலைத்திடச் செய்வோம்
சொல்லினைச் சுவையாய் கொடுத்துமே நிற்போம்
இல்லவர் உள்ளவர் பேதத்தைக் களைவோம்
எல்லோர் மனத்திலும் இன்பத்தை நிறைப்போம்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

# சுகாதாரத்துறை வெற்றிடங்களை நிரப்ப விரைவில் நடவடிக்கைகள்

## அமைச்சர் ரமேஷ் பத்திரண உத்தரவாதம்

திருகோணமலை மாவட்டத்தில் வைத்தியசாலைகளில் நிலவும் வைத்தியர்கள், தாதியர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதேநேரம் நாடளாவிய ரீதியில் இவ்வாறான குறைபாடுகள் காணப்படுவதுடன்எதிர்வரும்இரண்டுவருடங்களில் வைத்தியர்கள் பற்றாக்குறை உள்ளிட்ட அரசாங்க வைத்தியசாலைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது இம்ரான் மஹ்றூப் எம்.பி. எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே சுகாதார அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

விசேட மருத்துவர்கள் மற்றும் வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு சென்றுள்ளமையால் நாட்டில் பல பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளிலும் மருத்துவர்களுக்கான குறைபாடு காணப்படுகிறது. அந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் நிலவும்மருத்துவர்பற்றாக்குறைஉள்ளிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு உரிய நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். அத்துடன் வைத்தியர் உள்ளிட்டசுகாதாரத்துறைவெற்றிடங்களில் உடனடியாக முழுமையாக நிரப்புவதற்கு முடியாவிட்டாலும் அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி முடிந்தளவில் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பயிற்சிக்குப் பின்னரான டாக்டர்களுக்கானநியமனங்கள்விரைவில்வழங்கப்படும் போது திருகோணமலை கந்தளாய் வைத்தியசாலை தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும். – என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆட்சியாளர்கள் பதில் சொல்ல வேண்டிய கேள்வி

மட்டக்களப்பைச் சேர்ந்த அம்பிட்டிய சுமணரத்ன தேரர் சட்டத்திற்கும் நீதிக்கும் அப்பாற்பட்டவரா என்று அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான முாரப் கேள்வி எழுப்பியுள்ளார். நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையில் இந்த நியாயமான கேள்வியை அவர் எழுப்பியுள்ளார்.

“மட்டக்களப்பை சேர்ந்த ஒரு தேரர் அண்மையில் பேசுகிற போது தமிழ் மக்களை அவர்கள் எவராக இருந்தாலும் சரி தமிழ் மக்களை கண்டம் துண்டமாக வெட்டுவேன் என்று எச்சரித்தார். அவரது காணொலி எல்லா இடங்களிலும் பரவி இருந்தது. அவ்வாறு கண்டம் துண்டமாக வெட்டுவேன் என்று எச்சரிக்கை விடுத்துள்ள பிக்கு இன்றுவரை கைது செய்யப்படவில்லை. அவருக்கு எதிரான எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றால் இந்த நாட்டிலே சட்ட ஆட்சி நடக்கிறதா என்ற ஒரு கேள்வி எழுகிறது.

பொருளாதார கெடுபிடிக்குள் சிக்கிச் சின்னாபின்னமாகிய இந்த நாடு இன்று ஓரளவுக்கு மூச்சுவிடக்கூடிய இந்தச் சூழலிலே மீண்டும் இனவாத ரீதியிலான செயற்பாடுகளை உருவாக்கும் வண்ணமான சிலர் வடக்கு கிழக்கிலே செயற்பட்டு வருகின்றனர். எனவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். நாட்டின் பொருளாதாரத்தை சீரமைத்த ஜனாதிபதியை நான் பாராட்டுகிற அதேவேளையிலே இந்த இனவாத ரீதியான போக்குடையவர்களை அடக்கி ஆள்வதற்கு சட்டம் பயன்படுத்த வேண்டும் என்பதை சட்டத்தை உருவாக்கிய இந்த உயரிய சபையிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அம்பிட்டிய தேரர் சாதாரணமாகப் பேசுகிற முறைமையை பார்த்தாலே அவர் எத்தகையவர் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இன்று மட்டக்களப்பில் அவர் பல்வேறு கருத்துக்களை வெளியிடுகிறார், உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய கருத்துக்களை வெளியிடுகிறார், அதனை யாரும் இங்கு ஏற்றுக்கொள்ள முடியாது.

அம்பிட்டிய தேரரின் பேச்சிற்கு பின்பு இதுவரையும் அவருக்கு தண்டனை கொடுக்கப்படவில்லை என்றால் இந்த நாட்டிலே நீதி மன்றத்துக்கு மேலாக, சட்டம் அரசலமைப்புக்கும் மேலாக பௌத்த பிக்குகள் இருக்கிறார்களா என்பதை இந்த சட்ட சபையில் இருப்பவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். யாராக இருந்தாலும் குற்றம் புரிந்தால் அது குற்றம்தான். குற்றத்துக்கான தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்” என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தியிருக்கிறார்.

அவரது கருத்துக்கள் கேள்விகள் நியாயமானவை. ஆட்சியாளர்கள் பதில் சொல்லியேயாகவேண்டிய கேள்விகள்.

தெற்கிலே உள்ள தமிழர்கள் ஒவ்வொருவரையும் வெட்டுவேன் என்று அம்பிட்டிய தேரர் பயங்கரமாக இனவாதத்தைக் கக்கியபோதும் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவரது செயல் தொடர்பாக காவல்துறையினரிடம் முறையிடப்பட்டபோதும், தமிழ்த் தலைவர்கள் தெற்கிலும் வடக்கிலும் கிழக்கிலும் அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியபோதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அமைதி, இன நல்லிணக்கம் என்றெல்லாம் பேசும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில்தான் இந்த மோசமான நிலமை. பௌத்தத்துக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்தார்கள் என்று கலைஞர்களையும் யுரியூப்பர்களையும் பிடித்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கத் தெரிந்த ஆட்சியாளர்களுக்கு அம்பிட்டிய தேரர் போன்ற இனங்களிடையே மோதலை உருவாக்கும் ஒருவர் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை என்பதே இந்த நாடு இனவாதத்தின் பிடியில் மட்டுமே இருக்கின்றது என்பதற்கான சாட்சி. இந்த நிலை மாறாதவரையில் 2 – 048இலும் நாடு வளர்ச்சியடைந்த நிலையை எட்டாது.




# ரணிலும் அமெரிக்காவும்

**உபுல் யோசப் பெர்னான்டோ**



அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் ஈராக் விடயத்தில் தலையிட்டது தவறு என்று உணர்ச்சியுடன் நம்பும் உறுப்பினர்கள் இன்று இந்த மண்டபத்தில் உள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் தோல்வியால் உலகப் பொலிஸ்காரனான அமெரிக்காவும் அவற்றின் நட்பு நாடுகளும் தலையிடுவதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள்” என்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் தனது உரை ஒன்றில் தெரிவித்திருந்தார் ரணில் விக்கிரமசிங்க.

2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் பிரதமராகக் கலந்துகொண்ட ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய இந்த உரை இலங்கையின் அரசியல் கட்சிகளிடமிருந்து அவருக்குக் கடுமையான விமர்சனங்களைப் பெற்றுத் தந்தது. ரணிலின் பேச்சுக்கு அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா மற்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மற்றும் ஜனதா விமுக்தி பெரமுனா ஆகிய கட்சிகள் கண்டனம் தெரிவித்திருந்தன.

இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை அமெரிக்காவுக்கு சாதகமாக மாற்ற ரணில் முயற்சிக்கிறார் என்று அவர்கள் குற்றஞ்சாட்டினர். அதையடுத்து இலங்கையிலுள்ள பத்திரிகை ஆசிரியர்களைச் சந்தித்த ரணில் தனது ஐ.நா. உரையை ஊடகங்கள் திரிவுபடுத்திவிட்டதாகக் கூறினார். ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கு ஆதரவாகத் தான் உரை நிகழ்த்தவில்லை என்றார். ஆனால், ரணில் அமெரிக்காவிற்குச் சார்பாக இலங்கையின் வெளியுளவுக்கொள்கையை வளைக்கப்பார்த்தார் என்பதை அமெரிக்கத் தூதரகத் தகவல்களான விக்கி லீக்ஸ் மூலம் பின்னாள்களில் வெளியானது.

‘‘அதிகாரத்திற்கு வந்ததில் இருந்து, பிரதமர் விக்கிரமசிங்க, இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை அமெரிக்காவுடன் நெருக்கமாக வழிநடத்த நடவடிக்கை எடுத்துள்ளார், இதைச் செய்வதன் மூலம், சர்வதேச குற்றவியல் நீதிமன்ற பன்னாட்டு உடன்படிக்கையில் கையெழுத்திடாது அமெரிக்காவுடன் சேர்ந்து தவிர்த்தது உள்ளிட்ட வெற்றிகளைப் பெற்றுள்ளார். ஈராக் தொடர்பான விடயத்தில் அவர் அமெரிக்கா பக்கம் சார்ந்து நின்றுள்ளார். அண்மையில் அவரது முக்கிய அமைச்சர்களில் ஒருவர், இலங்கை அணிசேரா நாடுகள் அமைப்பிற்கு எதிரான செயற்பாடுகளுக்குத் தலைமை தாங்கவேண்டும் என்று தெரிவித்தார். இது பிரதமரின் முயற்சி கடுமையான எதிர்ப்புக்களையும் சந்தித்துள்ளது. அவரது முக்கிய அமைச்சர்களில் ஒருவர் சமீபத்தில் NAMக்கு ஒருவித எதிர் எடையை உருவாக்குவதில் GSL முன்னணி வகிக்க வேண்டும் என்று முன்மொழிந்தார். பிரதமரின் முன்முயற்சி னிய்பு அதிகாரிகளிடமிருந்து கடுமையான எதிர்ப்பை எதிர்கொண்டது. அதற்கும் மேலாக, ஜனாதிபதியும் (சந்திரிகா) எதிர்க்கட்சியும், பெரும்பாலான பத்திரிகைகள் மற்றும் புத்திஜீவிகளின் ஆதரவுடன், அவரது அமெரிக்க சார்புக் கொள்கைகளை நசுக்கினார்கள்.

ஈராக் போருக்குப் பிந்தைய சூழலில், பிரதமர் ஒரு ஆபத்தான சகவாழ்வு சூழ்நிலையை எதிர்கொண்டுள்ள நிலையில், இலங்கை அரசு தொடர்ந்து அமெரிக்காவுடன் நெருங்கி வர விரும்புகிறது என்று நாங்கள் நினைக்கிறோம், இருப்பினும், அமெரிக்க அரசை நோய்கி அவரது சார்பு தொடர்பில் கூடுதல் நடவடிக்கைகளைக் கவனமாகத் திட்டமிவேண்டும். ஆயினும்கூட, இலங்கை ஒரு கடினமான சமாதான முன்னெடுப்பை எதிர்கொள்வதோடு, தமிழ்ப்புலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு உதவி தேவைப்படுவதால், நாட்டின் பெரும்பான்மையானவர்களின் போக்கு, பிரதமரின் அமெரிக்க சார்பு நடவடிக்கைகளுக்குச் சாதகமாக அமைகிறது என்று நாங்கள் நினைக்கிறோம்.” என்று அந்த விக்கிபீடியா தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ரணிலின் ஐ.நா. உரையால், ரணிலின் அரசை ஆதரிக்கும் முஸ்லிம் கட்சிகள் பெரும் சிக்கலுக்குள்ளாகின. ஈராக் விவகாரத்தில் இலங்கையின் சரியான நிலைப்பாட்டை ஐ.நாவிடம் எடுத்துரைக்கவேண்டும் என அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா சுட்டிக்காட்டியபோதிலும் ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் அதற்கு அனுமதிக்கவில்லை. ஒன்றாகப் பேசுவதற்கு அவகாசம் கேட்டாலும், ஐ.நாவின் இலங்கைத் தூதுவர் அதைத் தடுத்தார். ஒக்டோபர் 5, 2003 அன்று, சண்டே டைம்ஸ் நாளிதழ் ரணிலின் உரையை அப்போது ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நிராஜ் தேவ் ஆதித்யா எழுதியதாகச் செய்தி வெளியிடப்பட்டது.

நிராஜ் தேவ் ஆதித்யா இன்னும் ரணிலின் சர்வதேச ஆலோசகராக இருக்கிறார், அவர் ரணிலின் உரைகளை எழுதுகிறாரா என்று தெரியவில்லை. ஆனால் ரணில் இம்முறை ஐ.நா.வில் 2003இல் பேசியதைவிட முற்றிலும் மாறுபட்ட உரையை ஐ.நா.வில் ஆற்றினார். அமெரிக்காவை விமர்சித்த ரணில், பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேல் தாக்குதலையும், அதற்கு ஆதரவாக அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் செயற்படுவதையும் கண்டித்தார். கடந்த வாரமும் அதனைக் கடுமையாக விமர்சித்தார். . அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் இலங்கையில் மனித உரிமைகள் பற்றிப் பேசுவதற்கு முன், பலஸ்தீனத்தில் இஸ்ரேல் நடத்தும் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக பேச வேண்டும் என்றார்.

2003க்கும் 2023க்கும் இடைப்பட்ட கால வித்தியாசம் 20 ஆண்டுகள். இந்த 20 ஆண்டுகளில் ரணிலின் மாற்றம் சுவாரசியமானது. 20 வருடங்களில் ரணில் அமெரிக்க ஆதரவாளராக இருந்து அமெரிக்க எதிர்ப்பாளராக மாறியதை ரணிலின் நெருங்கிய நண்பர்களால் கூட நம்ப முடியவில்லை. ரணிலின் அமெரிக்க எதிர்ப்புக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலில் சீனாவுக்குதான் அமெரிக்க சார்பு இல்லை என்று காட்டுவது. இரண்டாவது, அவர் பொதுஜன பெரமுனவின் அமெரிக்க எதிர்ப்பு வாக்குத் தளத்தில் பிரபலமாக இருக்க விரும்பினார். ரணில் இன்னும் சீனாவின் நம்பிக்கையை வெல்லவில்லை என ரணிலுடன் சீனா சென்ற சீன அனுதாபி விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சீனாவின் நம்பிக்கையைப் பெற ரணில் அமெரிக்காவை எவ்வளவு காலம் விமர்சிக்க வேண்டும் என்று தெரியவில்லை. இலங்கைக்கான சீனாவின் முன்னாள் தூதுவர் ஒருவர், மூன்றாம் உலக நாடுகள் தொடர்பான சீனக் கொள்கை பற்றி இலங்கை வர்த்தகர் ஒருவரிடம் கதைத்துள்ளார். சீனாவை எதிரியாகக் கருதும் நாடுகளை எப்படி மண்டியிட வைப்பது என்று சீனாவுக்குத் தெரியும் என்றும், அவர்களைக் கடனில் சிக்க வைத்து அதன் பிறகு அவர்களின் நலனுக்காக அவர்களுடன் நட்பு கொள்ள முயற்சிப்பது அதன் பாணி என்றும் அவர் கூறினார். ரணிலுக்கும் சீனா இதையே செய்கிறதா என்று தெரியவில்லை.

# ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப விரைவில் ஏற்பாடு

## அரவிந்தகுமார் தகவல்



நாட்டில் தற்போது நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்களை வழங்கும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அத்துடன் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக அதிபர்களுக்கான போட்டிப் பரீட்சை அடுத்த வருடம் ஜூன் மாதத்தில் நடத்தப்படும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் குமாரசிறி ரத்நாயக்க எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே கல்வி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -நாட்டில் தேசிய பாடசாலைகள் 396, மாகாண பாடசாலைகள் 9, 915, அந்த வகையில் மொத்தமான பாடசாலைகளின் எண்ணிக்கை 10,311 ஆகும்.

வடக்கில் செயலிழந்துள்ள பாடசாலைகள் 109. இவை மாகாண பாடசாலைகளுக்குள் உள்ளடங்குகின்றன.

தரப்படுத்தலுக்கு உட்பட்ட அதிபர்கள் உள்ள பாடசாலைகளில் தேசிய பாடசாலைகள் 309. மாகாண பாடசாலைகள் 6328 காணப்படுகின்றன. மொத்தம் 6627 பாடசாலைகள் உள்ளன.

அத்துடன் பதில் அதிபர்கள் கடமை புரியும் பாடசாலைகளில் தேசிய பாடசாலைகள் 87. மாகாண பாடசாலைகள் 3478. மொத்தமாக 3565 பாடசாலைகள் காணப்படுகின்றன.

அத்துடன் பதில் அதிபர்கள் கடமையாற்றும் பாடசாலைகள் மேல் மாகாணத்தில் 235 காணப்படுகின்றன. மத்திய மாகாணத்தில் 564. சப்ரகமுவ மாகாணத்தில் 505. வடமேல் மாகாணத்தில் 414. ஊவா மாகாணத்தில் 364. வடமத்திய மாகாணத்தில் 355. தென்மாகனத்தில் 326. கிழக்கு மாகாணத்தில் 449. வட மாகாணத்தில் 269. அந்த வகையில் மொத்தமாக 3565 பாடசாலைகள் இவ்வாறு காணப்படுகின்றன. 2019 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட பரீட்சைகளுக்கு இணங்க இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்கான நியமனங்களின் பின்னர் அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

அது தொடர்பில் தற்போது தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்தப்பட்டு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. அதேபோன்று கல்வியமைச்சர் சுசில்பிரேமஜயந்த மலையக பெருந்தோட்ட பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்.

அததுடன் இலங்கை அதிபர் சேவையின் மூன்றாம் தரத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அதிபர் சேவை மூன்றாம் தரத்திற்கு ஆள்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - என்றார்.

(05)

# வரவு - செலவுத் திட்டத்துக்கு அரச நிதி குறித்த குழு அனுமதி





2024 நிதி ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்திற்கு அரச நிதி தொடர்பான தெரிவுக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய 2024 ஆம் ஆண்டுக்கான மீண்டுவரும் செலவீனம் 5350 பில்லியன் ரூபா. மூலதன செலவு 2473 பில்லியன் ரூபா என மொத்தமாக 7823 பில்லியன் ரூபா எனவும் கடன் பெறும் எல்லை 3900 பில்லியன் ரூபா எனவும் அரச நிதி தொடர்பான குழுவில் தலைவர் ஹர் டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர் டி சில்வா தலைமையிலான அரச நிதி தொடர்பான குழு வெள்ளிக்கிழமை கூடியது.

இதன்போது 2024 நிதி ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய 2024 நிதி ஆண்டுக்கான மீண்டுவரும் மற்றும் மூலதன செலவு, கடந்த வருடத்துக்கு இணையாக ஒப்பீட்டளவில் மதிப்பீடு செய்யப்பட்டு ஒரு சில விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக் கப்பட்டது.

வருடாந்த வரவு - செலவுத் திட்ட யோசனைகளில் பெரும்பாலானவை யோசனைகளாகவே வரையறுக்கப்பட்டுள்ளமை சிக்கலானதென குழுவின் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டினார். இதற்கமைய வரலாற்றில் சகல அரசாங்கங்களாலும் முன்வைக்கப்பட்ட யோசனைகளில் குறைந்தபட்ச யோசனைகள் மாத்திரமே இறுதிக்கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இது ஒரு தவறான ஏடுத்துக்காட்டாகும். இந்த தவறை திருத்திக் கொண்டு வரவு செலவுத்திட்டத்தின் பின்னணியை ஆராய்ந்து உரிய தீர்மானம் எடுக்க வேண்டும்.

இதற்கமைய 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் முன் மொழியப்பட்ட விடயங்கள் எந்தளவுக்கு சாத்தியப்படுத்தப்பட்டுள்ளன என்பது தொடர்பாக விரிவான அறிக்கை 13 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு வழங்கப்பட வேண்டும்.

வரவு செலவுத்திட்டத்தின் 6 ஆவது அத்தியாயத்துக்கு அமைய " அபிவிருத்தி நடவடிக்கைகள் "என்ற செயற்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை பிறிதொரு விடயதானத்திற்கு அமைய பிறிதொரு செயற் திட்டத்துக்கு மாற்றுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய 2016 ஆம் ஆண்டு முதல் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியம் தொடர்பாக ஆவணப்படுத்தல் தரவுகளை வெள;வேறாகக் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. அத்துடன் வருடாந்த வரவு - செலவுத்திட்ட பற்றாக்குறை 5 வீதத்திற்கும் குறைவாக பேணப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டது.(05)

முல்லை ஒய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஒய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

# நாடாளுமன்ற ஒழுங்குவிதி, கோட்பாடுகளுக்கு சபாநாயகரின் செயற்பாடுகள் முரணானவை

## சந்திம வீரக்கொடி குற்றச்சாட்டு



சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் செயற்பாடுகள் ஒருதலைபட்சமானதுடன், நாடாளுமன்ற ஒழுங்குவிதிகள் மற்றும் கோட்பாடுகளுக்கு முரணானது என்பது பலமுறை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நிறைவேற்றுத்துறையின் கட்டளைகள் நாடாளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. சட்டத்தை செயற்படுத்தும் எந்த நிறுவனங்கள் மீதும் நாட்டு மக்களுக்கு நம்பிக்கை கிடையாது என நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப் பொறுப்பு சட்டமூலம், உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் தொடர்பான சட்டமூலம் என்பன மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

நாட்டு மக்களுக்கு நாடாளுமன்றத்தின் மீதும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் நம்பிக்கை இல்லை. இளம் தலைமுறையினர் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். வயதானவர்கள் தொடர்ந்து அரசியலில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

அமைச்சரவையின் அமைச்சர் நீதிமன்றத்தின் சுயாதீனத்தை விமர்சிக்கிறார். நீதியரசரின் பெயரைக் குறிப்பிட்டு கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார். இதன் உண்மை தன்மையை ஆராய வேண்டும். நீதிமன்ற கட்டமைப்பின் மீதான மக்களின் நம்பிக்கை இல்லாதொழிக்கப்பட்டால் அது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஒருதலைபட்சமாக செயற்படுகிறார் என்பது யாவரும் அறிந்ததே. கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடிகளை பதவி நீக்கும் பிரேரணை மீதான விவாதம் வியாழக்கிழமை இடம்பெற்றது. பிரேரணை மீது வாக்கெடுப்பு கோரப்பட்ட போதும் அதற்கு சபாநாயகர் இடமளிக்கவில்லை.

நாடாளுமன்ற நிலையியல் கட்டளைக்கு அமைய பிரேரணை மீது ஓர் உறுப்பினரேனும் வாக்கெடுப்பு கோரினால் அதற்கு சபாநாயகர் மதிப்பளிக்க வேண்டும். ஆனால் சபாநாயகர் அவ்வாறு செயற்படவில்லை.

நாடாளுமன்ற ஒழுங்குவிதிகள் மற்றும் கோட்பாடுகள் ஆகியவற்றுக்கு முரணாகவே சபாநாயகர் செயற்படுகிறார்.

நிறைவேற்றுத்துறையின் கட்டளைகள் நாடாளுமன்றத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. எதிர்க்கட்சிகளின் கருத்து சுதந்திரத்தை முடக்கும் வகையில் கட்டளைகள் தற்போது விதிக்கப்படுகின்றன. இது முற்றிலும் தவறானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். - என்றார். (05)

# அனலைதீவில் 27 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், அனலைதீவு பகுதியில் இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 69 கிலோ நிறையுடைய 27 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

நாட்டிற்குள் போதைப்பொருள் ஊடுருவலைத் தடுக்கும் நோக்கில் கடற்படையினர் நாட்டைச் சுற்றியுள்ள கரையோரப் பகுதிகளிலும், கடற்பரப்புகளிலும் வழமையான தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

அதற்கமைவாக வடக்கு கடற்படை கட்டளை பிரிவு யாழ்ப்பாணம், அனலைதீவு கடற்பரப்பில் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டிருந்தது.

இந்த நடவடிக்கையின் போது கடற்படையினர் கடலோரப் பகுதியில் இருந்து சந்தேகத்திற்கிடமான பொதியை மீட்டுள்ளதுடன் அதிலிருந்து 69 கிலோ மற்றும் 05 கிராம் நிறையுடைய 18 கேரள கஞ்சா பொதிகளையும் மீட்டுள்ளனர்.

கேரள கஞ்சாவின் மொத்தப் பெறுமதி 27 மில்லியன் ரூபா எனவும் கேரள கஞ்சாவை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் வரை கடற்படை பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. (05)

# பெந்தோட்டைக்குச் சுற்றுலா சென்ற குடும்பத்தினருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி

காலி - பெந்தோட்டை பகுதியில் 2 வயதும் 2 மாதங்களான குழந்தை ஒன்று ஹோட்டலில் உள்ள நீச்சல்தடாகத்தில் விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு, திம்பிரிகஸ்யா பிரதேசத்தைச் சேர்ந்த குடும்ப உறுப்பினர்கள் குழுவொன்று சுற்றுலா சென்று பெந்தோட்டை பிரதேசத்திலுள்ள குறித்த ஹோட்டலில் தங்கியிருந்துள்ளனர்.

இதன்போதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், குழந்தை அறையில் இல்லாததால் தாயும் தந்தையும் தேடியுள்ள போது, ஹோட்டலில் உள்ள நீச்சல் தடாகத்தில் குறித்த குழந்தை இறந்து மிதந்த நிலையில் மீட்கப்பட்டு பெந்தோட்டை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)

# போலிக் காணி உறுதிப்பத்திரம் தயாரித்து பணமோசடி செய்தவர் கொழும்பில் கைது

*கொழும்பு -பொரள்ளை பகுதியில் போலி காணி உறுதிப்பத்திரமொன்றை தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நபர் ஒருவர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இராஜகிரிய பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடைய நபர் ஆவார். கைதுசெய்யப்பட்ட நபர் 87.5 பரப்பு காணியை போலி உறுதிப்பத்திரம் தயாரித்து 136 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்து பண மோசடியில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்தசம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பொரள்ளை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டதையடுத்து சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டார். (05)*



காலைக்கதிர்
Kalaikkathir

# தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தை விடுவிக்கக்கோரிப் போராட்டம்










முல்லைத்தீவு மாவட்டத்தின் தேராவில் மாவீரர் துயிலுமில்ல காணியை இராணுவத்திடமிருந்து விடுவிக்கக் கோரி, நேற்று (சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில் இராணுவ முகாமுக்கு முன்பாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேராவில் மாவீரர் துயிலும் இல்லக் காணியில் பாரிய பிரதேசத்தை இலங்கை இராணுவத்தின் 14 படைப்பிரிவு கையகப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், மாவீரர்தினநினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு இடவசதியின்மை, தமது உறவுகளைப் புதைத்த இடத்தில் அஞ்சலி செலுத்த முடியாத நிலை மாவீரர்களின் உறவுகளுக்கு ஏற்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியும், மாவீரர் துயிலும் இல்லக் காணியில் இருந்து இராணுவத்தை வெளியேறுமாறு பல தடவைகள் அழுத்தம் கொடுத்தும் இதுவரை பயனில்லாத நிலையில் இராணுவத்தை வெளியேறுமாறு கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, 'கல்லறைகளை வழிபட வழிவிடு', 'கல்லறைகள் மேலிருந்து இராணுவமே வெளியேறு', 'மிதிக்காதே மிதிக்காதே... புனிதர்களை மிதிக்காதே', 'அழவிடு அழவிடு... அம்மாக்களை அழவிடு', 'விளக்கேற்றுவோம் விளக்கேற்றுவோம்... பிள்ளைகளுக்கு விளக்கேற்றுவோம்', 'கல்லறைகளை அழிப்பதும் புத்தனின் போதனையா' போன்ற பல்வேறு வாசகங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பதாதைகளைத் தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்,

இதில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் பிரதேச சபையின் தவிசாளர்கள், முன்னாள் பிரதேச சபைஉறுப்பினர்கள், சமூகசெயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

(05)

# களுத்துறை றைகம தோட்ட மக்களின் மீது பெரும்பான்மையின இளைஞர்கள் தாக்கு

## செந்தில் தொண்டமான் தலையீட்டால் சமரசம்





தீபாவளி நாள்களில் றைகம தோட்டப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் மீது பெரும்பான்மையின இளைஞர்கள்தொடர்ச்சியாக அச்சுறுத்தல் விடுத்தும் தாக்குதல்களை நடத்தியும் வந்த நிலையில், இந்த விவகாரத்தில் தலையீடு செய்துள்ள கிழக்கு மாகாணஆளுநரும், இ.தொ.காவின் தலைவருமான செந்தில் தொண்டமான், உடனடியாக மேல் மாகாண ஆளுநர் மற்றும் மேல் மாகாண பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு இந்த விடயத்தைக் கொண்டுசென்று பாதிக்கப்பட்டிருந்ததமிழ்மக்களுக்குநீதியை பெற்றுக்கொடுத்துள்ளதுடன், பெரும்பான்மையின இளைஞர்களின் அடாவடிக்கு முற்றுப் புள்ளியும் வைத்துள்ளார்.

மேல்மாகாணம் களுத்துறை மாவட்டம் றைகம தோட்டப்பகுதியில் வாழும் தமிழ் மக்கள் தீபாவளியை முன்னிட்டு நகர் பகுதி கடைகளுக்கு அல்லது தோட்டத்தை விட்டு வெளியேறும் சந்தர்ப்பங்களில் அந்தப் பகுதியில் வாழும் சில பெரும்பான்மையின இளைஞர்களின் தாக்குதல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாகி வந்துள்ளனர்.

பெரும்பான்மையின இளைஞர்களின் தாக்குதலில் பலருக்குக் காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன், இந்த விவகாரத்தைப் பாதிக்கப்பட்டவர்கள், இ.தொ.காவின் தலைமைக் காரியாலயமானசௌமியபவனில் கிழக்கு மாகாண ஆளுநரும் இ.தொ.காவின் தலைவருமான செந்தில் தொண்டமானிடம் முறைப்பாடு செய்தனர்.

இதுதொடர்பில் விரைந்து செயல்பட்ட செந்தில் தொண்டமான், மேல்மாகாண ஆளுநருக்கு அழைப்பை மேற்கொண்டு சம்பவம் தொடர்பில் விவரித்துள்ளதுடன், இவ்வாறு தமிழ் இளைஞர்கள் மீது தாக்குதல்கள் தொடர்ந்தால் அது தமிழ், சிங்கள முறுகல்களுக்கு வழிவகுக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் சம்பவ இடத்திற்கு நேரடியாக செல்ல உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக மேல் மாகாண ஆளுநர், கிழக்கு ஆளுநர் செந்தில்தொண்டமானிடம் உறுதியளித்துடன், மேல் மாகாண இ.தொ.கா பிரதிநிதிகளுக்கும், மேல் மாகாண ஆளுநருக்கும் இடையில் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தார்.

அதன் பிரகாரம் இ.தொ.காவின் உப தலைவர்களான திரு கேதிஸ், ராஜமணி பிரசாத் ஜீவானந்தம் மற்றும் ஜீவா மாகிரட் ஆகியோர் மேல்மாகாண ஆளுநரின் அலுவலகத்தில் ஆளுநரை சந்தித்து முறைப்பாட்டைக்கையளித்திருந்தனர்.

அத்துடன், சம்பவம் தொடர்பில் மேல் மாகாண பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கும் ஆளுநர் செந்தில் தொண்டமான் கொண்டு சென்றதுடன், சம்பவம் தொடர்பில் றைகம பொலிஸில் முறைப்பாடளிக்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கா துள்ளமை குறித்தும் சுட்டிக்காட்டியதுடன், உடனடியாக இந்தப் பிரச்சினைக்கு நீதியை பெற்றுக் கொடுக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், இந்த சம்பவத்தை விசாரணைக்கு உட்படுத்தி பாதிக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க மேல் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

பெரும்பான்மை இன இளைஞர்களை அழைத்து தமிழ் இளைஞர்களுக்கு அச்சுறுத்தல்களை விடுப்பதைக் கண்டித்துள்ளதுடன், அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளார். அத்துடன், காயங்களுக்கு உள்ளாகியிருந்த தமிழ் இளைஞர்களுக்கு மருத்துவவசதிகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

அதேபோன்று றைகம பகுதியில் பொலிஸாரை ரோந்து பணியில்ஈடுபடுத்தவும்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த விடயத்தில்உடனடியாகவிரைந்து செயற்பட்ட ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு றைகம பகுதி தமிழ் இளைஞர்கள் நன்றி தெரிவித்துள்ளனர். (05)

# பஸ்களில் சி.சி.டி.வி. கமெராகளை பொருத்துவது குறித்துத் தீர்மானம்

பயணிகள் பஸ்களில் சி.சி.டி.வி. கமெராக்கள் பொருத்துவதை கட்டாயமாக்க நாடாளுமன்றக்குழு தீர்மானித்துள்ளது.

அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடிய எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் மேற்பார்வைக் குழுவே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

பயணிகள் பஸ்களுக்கான வீதி அனுமதிப்பத்திரம் வழங்கும் போது ஜிபிஎஸ் தொழில்நுட்பத்தை கட்டாயமாக்குமாறும் எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாலக பண்டார கொட்டேகொட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பயணிகள் பஸ்களில் சி.சி.டி.வி. கமெராக்கள் பொருத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துமாறும் அதன்படி பஸ்களில் சி.சி.டி.வி. கமெராக்கள் பொருத்த நடவடிக்கை எடுக்குமாறும் கூட்டத்தில் கலந்து கொண்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு குழுவின் தலைவர் உத்தரவிட்டார்.

தற்போது நாட்டில் உள்ள பெரும்பாலான அதிவேக நெடுஞ்சாலைகள் நஷ்டத்தில் இயங்குகின்றன எனவும், இலாபம் ஈட்டும் அதிவேக நெடுஞ்சாலைகளின் இலாபத்தில் தான் நஷ்டத்தில் இயங்கும் அதிவேக நெடுஞ்சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன எனவும் இந்த நுட்டத்தின் போது தெரியவந்துள்ளது.

இதேவேளை, அனைத்து அதிவேக வீதிகளிலும் கியு.ஆர். குறியீட்டைப் பயன்படுத்தி கட்டணங்களை அறவிடுவதற்கான நடைமுறைகளை ஆரம்பிக்குமாறும் இதன் போது குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (05)

# சர்வதேச தரத்தினாலான சதுரங்கப் போட்டி யாழில்

யாழ்ப்பாணத்தில் சர்வதேச தரத்தினாலான சதுரங்கப் போட்டி எதிர்வரும் 8 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது,

'யாழ்ப்பாண சர்வதேச சதுரங்க போட்டி 2023' என்ற தலைப்பில், யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்படும் இந்த போட்டியில் 800 இற்கும் மேற்பட்ட வீர வீராங்கனைகள் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

இலங்கையின் சகல பாகங்களில் இருந்து மாத்திரம் அல்ல தமிழ்நாடு உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்தும் போட்டியாளர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச தரத்தில் நடத்தப்படும் சதுரங்க போட்டியில் 150 இற்கு மேற்பட்டவர்களுக்கு பரிசு கிடைக்கும் விதமாக வரையறுக்கப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளனர்.

இந்த போட்டி சர்வதேச போட்டியாக அமையவுள்ளதால், எமது பிரதேசத்தில் உள்ள சதுரங்க வீரர்கள் தங்களின் சர்வதேச தரத்தை கூட்டுவதற்கு இது, மிகவும் பயனுள்ளதாக அமையும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எம்மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டும் சர்வதேச போட்டிக்கான எமது இத்தனை வருட கனவை நேர்த்தியான முறையில் பூர்த்தி செய்ய அனைத்து தரப்பின் ஆதரவையும் கோரி நிற்கிறோம் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர். (05)



# தீபாவளி ஆசிச்செய்தி



## அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும்



உலகெங்கும் உள்ள தமிழர்கள், இந்துக்களினால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் தீபாவளி முக்கிய வகிபாகம் வகிக்கிறது. இப்பண்டிகை தொடர்பாக பல்வேறு புராண சான்றாதாரங்களும் கதைகளும் காணப்படுகின்றது. மகிழ்ச்சி பொங்க ஊர், உறவுகளுடன் கூடி இணைந்து மகிழ்ச்சியடையும் பண்டிகையாக காணப்படுகிறது.

இத்தருணத்தில் எமக்கு தேவையான விடயம் அமைதி. ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான விடயம் அன்பு, மன்னித்தல், புரிந்துணர்வு, பிழை ஏற்றுக்கொள்தல், ஏனையவர்களை மதித்து நடத்தல், சகோதரத்துவம் இவையே.

மனிதநேய ஒருமைப்பாட்டை தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்வதற்கு பண்டிகைகள் துணைபுரிகின்றன.


இன்றைய தினத்தில் ஒவ்வொரு மனிதருள்ளும் இருக்கும் தீய எண்ணங்கள், குணம் என்பன நீங்கி ஒளி பொருந்திய மன எண்ணத்தில் அனைவர் வாழ்விலும் இன்பமு-ண்டாகட்டும். நிறை மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட வேண்டும். அனைவர் மனதிலும், வாழ்விலும் வளமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ இத் தீபத்திருநாளில் ஓர் வழி கிடைத்திட வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்

சிவாகமகலாநிதி. சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்.
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

சிவஸ்ரீ. ச. சாந்தரூப குருக்கள்.
செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு.

# எப்பவோ ஒருநாள் தர்மம் நிலைக்கும்

## ஆறு திருமுருகன் தீபாவளிச் செய்தி



இவ்வுலகம் இறைவனின் படைப்பு. எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கு இறைவன் நல்ல இயற்கையைப் படைத்தான். மண்ணில் வாழும் மனிதர்கள் பிறவியின் மகிமையை உணர்ந்து நல்லவண்ணம் வாழவேண்டும். அதர்மத்தின் வழியில் நின்றவர்கள் அழிந்துபோவார்கள். அதனை உணர்த்துகின்ற திருநாளே தீபாவளி. நரகாசுரன் என்ற அசுரன் பலரை வருத்தினான். அருள் கொடுத்த இறைவன் அறத்தின் பால் நின்று அவனை அழித்தான். வாழும் மனிதர்கள் ஒவ்வொருவரும் கடவுள் தந்த வாய்ப்புக்களைக் கருத்தில் கொண்டு நன்றியோடு வாழவேண்டும். பிறர்க்கு உதவ வேண்டும். ஆணவத்தால் பிறரை வருத்தக்கூடாது. அகந்தை என்னும் இருளில் இருந்து நாம் வெளியே வரவேண்டும்.


ஒளியேற்றிக் கொண்டாடும் தீபாவளி உயர்ந்த கருத்தை விளக்கி நிற்கிறது. உலகில் உயர்ந்த தர்மம் நிலைக்க வேண்டும். அநியாயமாக போர்களின் வலுவால் ஒன்றுமறியா அப்பாவிக்குழந்தைகள் அல்லலுறுவதைக் காண்கிறோம். எங்கள் மண்ணில் நீதி நியாயத்துக்கு ஆபத்து வந்துவிட்டது. இறைதீர்ப்பு ஒன்று உண்டு என்ற நம்பிக்கையோடு நாம் வாழ்கிறோம்.

எப்பவோ ஒருநாள் தர்மம் நிலைக்கும் அதனை அனைவரும் எதிர்பார்ப்போம். தீபத்திருநாளில் அனைவரும் திருக்கோவில்களுக்குச் சென்று பிரார்த்திப்போம.; நீதி நிலைத்து நிம்மதியாக அனைவரும் வாழ தெய்வங்களை மன்றாடுவோம். உற்றார் உறவினர் நண்பர்களுக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து அவர்களின் நல்லாதரவைப் பெறுவோம். ஆனந்தமாக அனைவரும் வாழ எனது இதயபூர்வமான ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன். தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை. தலைவர், சிவபூமி அறக்கட்டளை. உப தலைவர் அகில இலங்கை இந்துமாமன்றம்.

# வாழ்வில் புத்தொளி வீசவேண்டும்

## இ.தொ.கா. தவிசாளரின் வாழ்த்து



ஒளிபிறந்து, இருள் அகன்ற தீபாவளித் திருநாளை தேசமெங் கும் வழி பிறக்கும் நம்பிக்கை பெருநாளாக வரவேற்போம். மனதிலிருக்கும் நல்ல எண் ணங்களை சமூக நலன்கள் நோக்கியதாக வளர்த்தெடுப்போம். நல்ல மனப்பாங்கை வளர்க்கும் உள்ளமாக அக விளக்கு இறை அருள் மூலம் பிரகாசிக்க இந்த தீபாவளி நாளில் தீபம் ஏற்றி மகா விஷ்ணு பெருமானை மனதார பிரார்த்திப்போம். அனைத்து இந்து மக்களுக்கும் தித் திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களை பகிர்ந்து கொள் வதில் பெரும் மகிழ் சியடைகின்றேன்.

அனைத்து மக்களுக்கும் அவர்களது வாழ்வு சிறப்படையவும் இந்த தீபாவளி தினத்தில் நாம் ஏற்றும் தீபம் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் பக்தியையும் தரக்கூடியதாக அமைய நாம் அனைவரும் தீபம் ஏற்றி பிரார்த் திப்போம். முழு உலக வாழ் மக்களும் மேமாய் இருக்க இந்தத் தீபாவளி நன்னாளில் குடும்ப உறவுகளுடன் தீபம் ஏற்றி மகா விஷ்ணுவை பிரார்த்திப்போம். மன தில் இருக்கும் தீய எண்ணங்கள் அகல வேண்டும். நல்ல எண்ணங்கள் நிரம்ப வேண்டும். அனைவரும் தீர்க்க ஆயுளுடன் சுபிட் சமாக வாழ இந்த தீபாவளி நாளில் நாங்கள் ஒன்று சேர்ந்து இலங்கையர்களாக அனைவருக்காகவும் பிரார்த்திப்போம்.

நாம் இலங்கையில் குடியேறி 200 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப் பெரிய பங்காற்றி வரும் எமது மக்களின் 200 வருட கால வரலாற்றையும் நாட்டுக்காக அவர்கள் செய்த தியாகங்களையும் நாம் இந்நன் நாளில் நினைவு கூறுவோம். எமது மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தும் நல்ல பல திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வாழ்வில் புத்தொளி வீச வேண்டும். எமது மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதிலும், பாதுகாப்பை உறுதிப் படுத்துவதிலும் நாம் என்றும் விழிப் புடன் செயற்படுவோம்.

# திருத்தந்தையை சந்தித்த இலங்கை ஆயர் பேரவை

இலங்கை ஆயர் பேரவையினர் திருத்தந்தை பிரான்சிசை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

ஐந்தாண்டுக்கு ஒருமுறை உரோமை சென்று திருத்தந்தையை சந்திப்பது வழக்கமாகும். இதன் அடிப்படையில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இம் முக்கியத்துவம் வாய்ந்த திருப்பயணத்தில் இலங்கையின் வடக்கு - கிழக்கு ஆயர்களும் இணைந்து கொண்டுள்ளனர்.

இதன் போது இலங்கை கிறிஸ்தவ திருச்சபையின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்கால விவகாரங்கள் குறித்து பாப்பரசருக்கு தெரிவிக்கப்பட்டதுடன், பரிசுத்த பாப்பரசரின் ஆலோசனைகளையும் பெற்றார். இந்தத் திருப்பயணமானது 'விளம்பர லிமினா வருகை' என திருச்சபையால் அழைக்கப்படுகிறது. (05)

# பிள்ளைகளை கொலை செய்யப்போவதாக ஆசிரியையை மிரட்டி கப்பம் பெறமுயன்ற கிராம உத்தியோகத்தர் கைது

ஆசிரியை ஒருவரை மிரட்டி கப்பம் பெற முயன்ற கிராம உத்தியோகத்தர் ஒருவர் ஹோமாகம பிடிபன பிரதேசத்தில் வைத்து கைது செய்-யப்பட்டுள்ளார் என மிரிஹான பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோமாகம பிடிபன தெற்கில் உள்ள சுவபுதுகம பிரதேசத்தில் முன்பள்ளி ஆசிரியை ஒருவரின் மூன்று பிள்ளைகளை கொலை செய்யப் போவதாகவும், மூத்த மகள் மீது அசிட் வீசுவதாகவும் மிரட்டி குறித்த கிராம உத்தியோகத்தர் கப்பம் பெற முயன்றுள்ளார்.

ஆனால் முன்பள்ளி ஆசிரியையிடம் கப்பம் கொடுக்க பணம் இல்லாததால், ஆசிரியை கிராம உத்தியோகத்தரால் தொடர்ந்தும் மிரட்டப்பட்டு வந்துள்ளார்.

இதன் காரணமாக அச்சத்தில் முன்பள்ளி ஆசிரியை கடமைக்கு செல்லாது தனது மூன்று பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்பாது தலைமறைவாகியிருந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து, கிராம உத்தியோகத்தர் கப்பப்பணத்தை பெறும் போது கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# சீனாவிடமிருந்து பொலிஸ் திணைக்களத்திற்கு 26 மோட்டார் சைக்கிள்கள், 100 கணினிகள்

சீன மக்கள் குடியரசினால் இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு 26 ரனொமொடோ வகை மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 100 டெஸ்க்டொப் கணனிகள் ஆகியவற்றை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க ஆகியோரின் ஒருங்கிணைப்புடன், பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ன் ஹொங்விடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் பணிகளை இலகுவாக்க இந்த நன்கொடையை வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆவணங்கள், இலங்கைக்கான சீன தூதுவர் சீ ன் ஹொங்வால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டதுடன், சீன தூதரக அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழு மற்றும் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (நிர்வாகம்) நிலந்த ஜயவர்தன உட்பட பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (05)

# கொடிகாமத்தில் விபத்து சாரதிக்குப் படுகாயம்





யாழ்ப்பாணம் கொடிகாமம் பகுதியில் தனியார் பஸ்ஸும் கூலர் வாகனமொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்துள்ளார்.

நேற்று (சனிக்கிழமை) காலை குறித்த விபத்து கொடிகாமம் - புத்தூர் சந்திக்கிடையே இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த பஸ்ஸும் யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த கூலர் வாகனமும் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

கூலர் வாகன சாரதி படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் ஏனையவர்கள் சிறிய காயங்களுடன் உயிர் தப்பினர். (05)

# பாகிஸ்தானுக்கு மிளகாயை திருப்பி அனுப்ப நடவடிக்கை

பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிளகாயில் அஃப்லாடாக்சின் கலந்துள்ளமையால் மீள் ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்றுமதிசெய்யப்பட்ட பொருள்களில் 25 மிளகாய் கொள்கலன்களும் உள்ளடங்குகின்றன என சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையைச் சேர்ந்த வர்த்தகர்கள் குழுவொன்று இந்த மிளகாயை இறக்குமதி செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, உணவின் தரம் தொடர்பான பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்கு சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு தொலைபேசி; 0112 112 718 எனும் விசேட இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. (05)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.11.2023இல் வெளியிடப்பெற்றது.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 12th November 2023


We welcome students' articles in word for publication


-Editor-

kalaikkathiredu@gmail.com


**Read the following passage and Answer: the question that follows.**

## Tammy's Pet Tiger

Tammy says she got a pet baby tiger today...a *real* one!

I haven't seen Tammy's tiger but I think it's a soft toy, not a real tiger.



Tammy says her tiger has blue eyes but only white tigers have blue eyes.
All other tigers have yellow eyes.

If Tammy's baby tiger is a real one what will Tammy do when it gets big?
Where will she keep it?
What will she feed it?
How will she exercise it?

Do you know something?
My Mum saw Tammy's Mum in a shop on Saturday.
Tammy's Mum was looking at some soft toys.
There were monkeys, bears, lions.....and there were tigers too.

Do you think Tammy's tiger is real?

**Questions.**

1. Tammy says she has a __ __ __ baby tiger.
2. Tammy's tiger might be a __ __ __ __ toy.
3. Tammy says her tiger has __ __ __ __ eyes.
4. Only __ __ __ __ __ tigers have blue eyes.
5. Tammy's __ __ __ was in a shop on Saturday.
6. The monkeys, bears and lions were soft __ __ __ __.

## My Dad




My dad is a lawyer. He is 42 years old. He has brown hair. He is very strong. He likes spending time with me. We usually go to the park together. He often gives me a shoulder ride. We sometimes play football together in the park. He is a great father. I love him very much.

1. My dad _____ (is/am/are) a lawyer.
2. He _____ (has/have) brown hair.
3. He _____ (like/likes) spending time with me.
4. We usually ____ (go/goes) to the park.
5. He often _____ (give/gives) me a shoulder ride.

## My Bedroom

Read the story then answer the questions.



I like to play with my toys in my bedroom. My dog and cat like to play with my toys with me. I have a big bed in my bedroom. It is blue. Can you see my toys. My toys are on the floor next to my bed. I like the walls in my bedroom, they are pink. My cat loves to be in my bedroom. I can give her a big hug!

Can you answer the questions ?

Can you see what toys are in the bedroom?

______________________________

What colour are the walls in the bedroom?

______________________________

How does she feel in the picture?

______________________________

How many pets does she have?


MAKING ENGLISH FUN



https://whatistheurl.com


Name : ________________

## My teddy bear



I am Rachel. This is my teddy bear Tom. My father gifted it to me on my birthday. It is very huge and brown in color. It sleeps with me. I play with it in the evening. I love Tom.

**1) What is the name of the teddy bear?**

a) George b) Michael c) Tom

**2) Who gifted Rachel the teddy bear?**

a) father b) mother c) grandmother

**3) The teddy bear is _____ in color.**

a) red b) white c) brown

**4) Rachel plays with her teddy bear in the _______.**

a) afternoon b) evening c) morning


https://whatistheurl.com

Please visit our site for worksheets and charts https://whatistheurl.com/


"konwledge isn't free. You have to pay attention"


## Reading Activity
### Animals Everywhere

**A. Read, look and complete the sentences.**



1. A _______________ has wings and fly through the air.
2. A _______________ has scales and long body.
3. A _______________ has fur and whiskers, they can climb.
4. A _______________ has paws and a tail, they can't climb.
5. A _______________ has fins and scales.

**B. Read the text and answer the questions.**




1. Are Cheetahs big cats?
2. Where do they live?
3. Do they have a big head?
4. What do they eat?
5. Can they run very fast?

Cheetahs are big spotted cats. They live in Africa's grasslands. They can run very fast. They have a small head, long legs and short fur. They are good hunters and they can eat big animals. Cheetahs can run very fast, they run 70 miles per hour.

## Fruits Crossword

DIRECTIONS: Fill in the crossword puzzle grid with the name of each fruit following the numbers and direction indicated. Use the word bank if you get stuck.



| | |
|---|---|
| APPLE | KIWI |
| APRICOT | LEMON |
| AVOCADO | ORANGE |
| BANANAS | PEAR |
| BLACKBERRY | PINEAPPLE |
| CHERRIES | RASPBERRY |
| COCONUT | STRAWBERRY |
| GRAPEFRUIT | WATERMELON |
| GRAPES | |

© 2018 puzzles-to-print.com

## JOBS & OCCUPATIONS

Choose the right option.

1. He's a ______. a. farmer b. doctor c. bus driver
2. He's a ______. a. singer b. doctor c. musician
3. She's a ______. a. nurse b. dancer c. waitress
4. She's a ______. a. doctor b. hairdresser c. nurse
5. He's a ______. a. pilot b. dentist c. farmer
6. He's a ______. a. postman b. fireman c. waiter
7. She's a ______. a. conductor b. singer c. reporter
8. He's a ______. a. pilot b. farmer c. bus driver
9. He's a ______. a. teacher b. doctor c. cook
10. He's a ______. a. detective b. reporter c. doctor
11. He's a ______. a. fireman b. postman c. detective
12. She's a ______. a. waitress b. cook c. hairdresser
13. He's a ______. a. teacher b. hunter c. waiter
14. He's a ______. a. mechanic b. postman c. fireman
15. She's a ______. a. teacher b. cook c. waitress
16. He's a ______. a. hunter b. painter c. mechanic
17. She's a ______. a. teacher b. doctor c. cook
18. She's a ______. a. nurse b. teacher c. student
19. He's a ______. a. fisherman b. cook c. mechanic
20. She's an ______. a. actress b. architect c. artist
21. She's an ______. a. actress b. architect c. artist
22. He's a ______. a. detective b. scientist c. hunter
23. He's an ______. a. astronaut b. architect c. actor
24. He's a ______. a. mechanic b. carpenter c. butcher

# HALLOWEEN



On October 31, Americans celebrate HalloweenHalloween means "holy" (hallow) "een" (evening). This is the evening before the Christian holy day of All Saints Day. On All Saints Day, Christians remember the saints,but Halloween is even older than Christianity.



Before Christianity, people in Europe believed that on October 31 ghosts of dead people came back To scare the ghosts, people dressed like devils and were very noisy. They also made big fires to keep the ghosts away. Later, people did not believe in ghosts, but they kept the day of Halloween for fun.



Immigrants came from Europe to America and brought with them the custom of Halloween. Halloween has some strange symbols. One symbol is jack-o'-lantern in the window. The jacko'-lantern is to scare ghosts. People cut the pumpkin, throw away all the inside, and cut a face in it. Then, they put a candle inside of it. Jack-o'-lantern usually looks scary too!



Today, in the USA, Halloween is very popular with the children. They wear masks and special customs. They go from house to house and say "Trick or treat!"People give themcandies, cookies or fruit. When people give nothing, the children sometimes play tricks on them.

**Answer the following questions.**

- When do people celebrate Halloween?
  ........................................................................
- Why did people start to celebrate Halloween?
  ........................................................................
- What is jack-o'-lantern?
  ........................................................................
- What do children do in Halloween?
  ........................................................................




An exercise for Grades 8 and 9 students.

***Fill in the blanks with the correct adverbs from the list below.***
(a) greatfully. (b) reverently (c) respectfully (d) attentively. (e) gracefully (f) loyally (g) thoroughly
(h) heatedly. (i) proudly. ( j) fluently

1. A swan swims ..................................
2. The lawyers argued. ..............................
3. Meera accepted the gift .........................
4. Jeevan can speak French.........................
5. Parents speak .................... of their children.
6. Students should listen to their teacher...................
7. .At a temple we should behave ........................
8. Workers speak to their masters.........................
9. We should do our work. .........................well
10. Good friends stick up to each other..................

Answeds: 1- e / 2.- h / 3- a / 4- j / 5- i/ 6- d /7- b / 8- c / 9- g. /10- f/

# Question Words

whose
what
who
which
when
why
where
how

**Fill in the gaps with a question word from the jars**

1.- ............ is your mom in bed? She has a bad headache.

2.- ............... time does she finish work? At five o'clock.

3.- .................... is younger, your sister or you? My sister.

4.- .............. school bag is the red one? Martin's.



5.- ................ did you keep your money? In the bank.

6.-............ does she do in the evening? She watches TV.

7.- ........... are you meeting your girlfriend? At the pub.

8.- ........... do you think about Sonia's boyfriend? He is handsome.

9.- ............. floor is the classroom on? On the second floor.

10.- ............. were you born? In Spain.



11.- .................. tall is your father?

12.- ............... much did you pay for that mobile phone?

13.- ... is she spending her summer holiday? In Ibiza.

14.- .............. did your brother get married? Last week.

15.- ............. you flying to San Francisco with? My parents.

16.- .......... often do you send postcards? Never.

17.-............ do you usually park your car? In the car park.

18.- ............ did you pay the electricity bill? By credit card.

19.- ........... would you like to drink? Some beer, please.

20.- .......... coat do you prefer, the black or the green one?

21.-............ far is the shopping centre?

22.-.............. have you been doing lately?



23.- ................ many friend has she got? Not many.

24.- ................. much does she weigh?

# M. K. Thyagaraja Bhagavathar

Mayavaram Krishnasamy Thiyagaraja Bhagavathar (1 March 1910 – 1 November 1959), also known by his initials as M. K. T., was an Indian actor, producer, and Carnatic singer. He is considered to be one of the most successful actors in Tamil cinema ever.

Bhagavathar was born in the town of Mayiladuthurai in then-Tanjore district of the Madras Presidency, British India. He started his career as a classical singer and stage artist in the late 1920s. In 1934, he made his debut in films with the movie Pavalakkodi which turned out to be a hit. From 1934 to 1959, Bhagavathar acted in 14 films of which 10 were box-office hits. Bhagavathar's 1944 film Haridas ran for three consecutive years at Broadway Theatre in Madras and created the record for the longest continuous run at a single theatre. Bhagavathar was arrested in 1944 as one of the main suspects in the Lakshmikanthan murder case and spent three years in prison before being released in 1947 after a Judicial Committee of the Privy Council verdict came in his favour.

Bhagavathar's career declined after his arrest. Although he did continue to act in Tamil films after his release from prison, none of them did well. Bhagavathar died of diabetes at the age of 49 on 1 November 1959. Bhagavathar was acclaimed for his powerful, melodious voice and the ease with which he could sing high-pitch notes. Critics and film historians acknowledge Bhagavathar as the First Superstar of Tamil cinema.[citation needed]

### Early life

Bhagavathar was born Thiyagaraja in Mayiladuthurai (then known as Mayavaram), Tanjore District on 1 March 1910.[1] He was the eldest son of Krishnasamy Aachary, a goldsmith. A few years after his birth, the family moved to Tiruchirappalli (then known as Trichinopoly), where Thyagaraja was admitted in a local school.

Right from his boyhood, Thyagaraja neglected his studies and desired to become a singer instead. According to a popular anecdote, Thyagaraja once ran away from home after being reprimanded by his father for his decision to become a singer, as singing was not considered to be an honourable profession in the conservative Indian society of the early 20th century. Krishnasamy Aachary, eventually, found his son in the Telugu-speaking town of Kadapa as he was singing to a large group of admiring listeners. Krishnasamy Aachary relented and encouraged his son to hone his skills. Soon, Thyagaraja began to sing bhajans.

### Early singing and stage career

F. G. Natesa Iyer, a railway officer with South Indian Railways, Trichy and the founder of an amateur theatre group, Rasika Ranjana Sabha, is credited with introducing Thyagaraja to the stage. One story is that he heard Thyagaja singing at a bhajan. Impressed with his talent, F. G. Natesa Iyer offered him the role of Lohitadasa in his play Harischandra, with the permission of Thyagaraja's father. Thyagaraja, who was ten at the time, agreed, and the play was a success. He also started training under the guidance of theatre veterans at that time in Trichy. However, Thyagaraja concentrated more on singing than acting and took a six-year training in Carnatic music from Madurai Ponnu Iyengar, an acclaimed violinist.

### Early films

In 1934, businessmen Lakshmana Chettiar and Alagappa Chettiar and film director K. Subramaniam happened to watch a Hindu mythological play called "Pavalakkodi" in which Bhagavathar played the lead role of Arjuna. Thoroughly impressed with the performance, Chettiar planned to produce a movie based on the same story with Bhagavathar the lead role. The film was shot in Adyar and was a success. It helped launch Bhagavathar's career in films.



Bhagavathar's second film Naveena Sarangadhara (1935) was again directed by K. Subramaniam and was based on a play called Sarangadhara. Bagavathar's next film was his first own production film under the banner Trichy Thyagaraja Films, "Sathyaseelan" (1936). The film had the novel feature of two Bagavathars appearing on the same frame, though it was not strictly a film with Bagavathar playing a double role. Bagavathar, apart from playing Sathyaseelan, also briefly appears as a court singer himself in the film.

### Rise to stardom 1937–1944

In 1937, Bhagavathar was cast in role of Bilwamangal in the film Chintamani directed by Y. V. Rao. Chintamani was record-breaking success and became the first Tamil film to run continuously for a year. Bhagavathar's songs in the movie were especially popular. The Tamil writer Kalki Krishnamurthy wrote that the film has made such an impact on the viewers that housewives would sing the song Mayaprapanchattil from the movie while preparing coffee in the morning and her husband would sing Rathey unakku kobam in response. However, the songs that were featured in the gramophone records produced by Saraswathi Stores were not sung by Bhagavathar as he did not have any business understanding with the company. With the profits obtained from the movie, the owners of Rayal Talkies constructed a theatre in Madurai and named it Chintamani.

The very same year, Bhagavathar was offered the title role in the film Ambikapathy made by the American film director Ellis R. Dungan. The film was Bhagavathar's second consecutive hit in the year and broke records set by Chintamani. Dungan was, however, heavily criticised by the conservative Hindu society for introducing controversially intimate scenes between Bhagavathar and the heroine Santhanalakshmi. Bhagavathar played the role of Saivite saint Thiruneelakanta Nayanar in the 1939 movie Thiruneelakantar.